# மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் தோட்ட மக்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் செயலாற்றல்.

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | 1 |
| 2. | நுழைவு | 3 |
| 2.1 | தலைப்பின் பின்னணி | 3 |
| 2.2 | தலைப்புக்கான நுழைவு | 4 |
| 2.3 | கணக்காய்வின் நோக்கெல்லையும் நோக்கெல்லைக்கான மட்டுப்பாடும் | 5 |
| 2.3.1 | கணக்காய்வின் நோக்கெல்லை | 5 |
| 2.3.2 | நோக்கெல்லை மட்டுப்படுத்தப்படல் | 5 |
| 2.4 | கணக்காய்வின் குறிக்கோள்களும் வரையறைகளும் | 6 |
| 2.5 | கணக்காய்வு நடைமுறை | 8 |
| 2.6 | தோட்டத்துறை தொடர்பான அடிப்படைத் தரவுகள் | 9 |
| 2.6.1 | காணிகள் தொடர்பான விபரம் | 9 |
| 2.6.2 | தோட்ட குடித்தொகை தகவல்கள் | 10 |
| 2.6.3 | தோட்டத்தில் காணப்படுகின்ற வீடுகள், குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்புச் செயற்திட்டம் என்பன. | 10 |
| 2.6.4 | தோட்டத்தில் காணப்படுகின்ற வீடுகள் | 11 |
| 2.6.5 | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தகவல்களின் பிரகாரம் இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை | 12 |
| 2.7 | செயற்திட்டம் தொடர்பாக நிறுவன ரீதியான ஆயத்தப்படுத்தல். | 13 |
| 2.7.1 | வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் உள்நாட்டு நிதிகளிலிருந்து அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 13 |
| 2.7.2 | வீடமைப்புச் செயற்திட்டம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டல்களைக் கடைப்பிடித்தல் | 19 |
| 2.7.3 | செயற்திட்டத்தின் முகாமைத்துவ உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பினை ஈடுபடுத்துதல் | 23 |
| 3. | கணக்காய்வு அவதானிப்புக்களை விபரமாக கலந்துரையாடல் | 23 |
| 3.1 | நிறுவனத்தின் பின்னணி மற்றும் ஆயத்தமாகுதல் | 23 |
| 3.2 | நலன்பெறுநர்களைத் தெரிவு செய்தல் | 26 |
| 3.3 | வீட்டு நிர்மாணத்திற்குப் பொருத்தமான நிலத்தை தெரிவு செய்தல் | 27 |
| 3.4 | வீடுகளுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்தல் | 28 |
| 3.5 | வீட்டு உரிமைகளை வழங்குதல் | 31 |
| 3.6 | கடன்களை மீள அறவீடு செய்தல் | 32 |
| 3.7 | அறவீடு செய்யப்பட்ட கடன்களை திறைசேரிக்கு அனுப்பி வைத்தல். | 35 |

| | | |
|---|---|---|
| 3.8 | இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் | 36 |
| 3.9 | வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களை வழங்குதல் | 39 |
| 3.10 | கொடியாகல வீடமைப்புச் செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்தங்களின் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் | 41 |
| 3.11 | ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் செலுத்துதல். | 42 |
| 3.12 | முகாமைத்துவக் கட்டணத்தைச் செலுத்துதல் | 44 |
| 3.13 | வீடுகளை நிர்மாணித்தல் தொடர்பான அவதானிப்புக்கள் | 44 |
| 3.14 | நியமதரமற்ற மூலப்பொருட்களை ஈடுபடுத்தி நிர்மாணித்தல் | 49 |
| 3.15 | செயற்திட்டத்தின் செயலாற்றல் | 56 |
| 3.15.1 | செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் | 56 |
| 3.15.2 | நிர்மாணத்தைக் கைவிடுதல் | 57 |
| 3.15.3 | அந்த நலன்பெறுநர்களினால் வீடுகளைப் பயன்படுத்துதல் | 58 |
| 3.15.4 | இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பயன்படுத்துதல் | 60 |
| 3.15.5 | பொருளாதார மற்றும் சமூகரீதியான தாக்கம் | 61 |
| 3.16 | ஏனைய அவதானிப்புக்கள் | 63 |
| 4. | சிபார்சுகள் | 64 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

----------------------------------------

இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 4.57% இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுக்கின்ற சமூக முரண்பாடுகளை நீக்கி ஏனைய மக்களுக்குச் சமமான சமூக நிலைமையுடன், சுயமரியாதையுடன் மற்றும் கௌரவத்துடன் போற்றப்படுகின்ற ஒரு கிராமிய சமூகமாக மாற்றும் குறிக்கோளுடன் 2015 திசெம்பர் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைச்சின் பிரதான கடமையான அரசாங்க மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணிகள் அற்ற லைன் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு ஏற்கனவே காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கால்நடை கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழும் இளைஞர் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இச்செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பிணையால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ள பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு 2006 திசெம்பர் 7 ஆந் திகதிய அமப/06/2249/240/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சமூகத்தை வலுப்படுத்தல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அமைச்சின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணிகள் இல்லாத மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதலை அமுல்படுத்துவதன் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக 2013 இலிருந்து 2019 வரை மாத்திரம் அமைச்சின் மூலம் செலவு செய்த மொத்தப் பணம் ரூபா 7,600,128,381 ஆகும். அவ்வாறு இருக்கையில் தோட்ட சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு மத்தியில் 93 சதவீதமானவர்களுக்கு வீடுகளுக்கான தேவைப்பாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க இச்செயற்திட்டத்தை சிக்கனமாக, ஆக்கபூர்வமாக மற்றும் விளைதிறனாக மேற்கொள்ளுதல் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை மற்றும் கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் இத்தலைப்பினை செயலாற்றல் கணக்காய்விற்காகத் தெரிவு செய்தல் இடம்பெற்றுள்ளது.

நிகழ்காலத்தில் பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் அது தொடர்பாக விளைதிறனான, ஆக்கபூர்வமான மற்றும் சிக்கனமான சேவைகளை வழங்குவதற்கு முடியாதிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டு நிதி ஏற்பாடு மற்றும் இந்திய உதவியின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் கணக்காய்வின் நோக்கெல்லைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததன் அடிப்படையில் நோக்கெல்லையை மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட துறை தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களுக்கு இணங்க அமைச்சினால் வீடுகளை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான காணியைத் தெரிவு செய்தல், வீடுகளுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்தல், நலன்பெறுநர்களைத் தெரிவு செய்தலும் அந்த நலன்பெறுநர்களால் வீடுகளைப் பயன்படுத்துதலும், வீட்டு உரிமைகளை வழங்குதல், வீடுகளை நிர்மாணித்தல், ஒப்பந்த கடன்களை மீள அறவீடு செய்தல், அறவிடப்பட்ட கடன்களை திறைசேரிக்கு அனுப்பி வைத்தல், இந்திய அரசாங்கத்தின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் முதலியன உரிய நியமங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரத்திற்கு மற்றும் காணப்படுகின்ற சட்ட கட்டமைப்பிற்குள் இடம்பெற்றிருக்காமையின் அடிப்படையில் அமைச்சின் விளைதிறன் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது. அதற்கிணங்க அமைச்சின் கடமைகள் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

அமைச்சினால் வீடுகளை நிர்மாணிப்பதற்காக பயிரிட முடியாத காணிகளைப் பயன்படுத்துதல், லைன் வீட்டுக் காணிகளில் மாடி வீடுகளை நிர்மாணித்தல், வீட்டு நலனாளிகள் வரையறைகளுக்கு இணங்க தெரிவு செய்யப்பட்டனர் என்பதற்கும் கடன் தொடர்பான புரிந்துணர்வு வழங்கப்பட்டது என்பதற்குமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், நிர்மாணங்களை பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க மேற்கொள்ளுதல், நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல், கடன்களை அறவீடு செய்யும் அறிக்கையை முறையாகப் பராமரித்தல் என்பவற்றிற்கு சிபார்சு செய்கின்றேன்.

## 2. நுழைவு

-------------

### 2.1 தலைப்பின் பின்னணி

--------------------------------------

சமூகத்தை வலுப்படுத்துதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அமைச்சின் (இதற்கு முன்னர் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு) செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் கீழ் அரசாங்க மற்றும் தனியார் தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றும் காணிகள் இல்லாத மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதல் காட்டப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் கால்நடை கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழும் 2015-2019 ஆண்டுகள் வரை மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழும் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் வீடுகளை வழங்கும் போது அதற்காக செலவிடப்பட்ட பணத்தில் ஒரு சதவீதத்தினை நலன்பெறுநர்களிடமிருந்து (இன்னல்களுக்கு உட்படவில்லையாயின்) அறவீடு செய்வதற்கும் மிகுதி சதவீதத்தினை அரசாங்கம் மேற்கொள்வதற்கும் அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்தது. அதற்கிணங்க பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்த முரண்பாடுகளை நீக்கி ஏனைய மக்களுக்குச் சமமான சமூக நிலைமையுடன், சுய மரியாதையுடன் மற்றும் கௌரவத்துடனும் போற்றப்படுகின்ற ஒரு கிராமிய சமூகமாக மாற்றும் குறிக்கோளில் அரசாங்க மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகள் சேவையாற்றும் காணி இல்லாது லைன் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் குறிக்கோளாக இருந்தது.

அமுல்படுத்தப்பட்ட வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை மாத்திரம் அரசாங்கம் செலவு செய்த பணம் ரூபா 7,600,128,381 ஆகும்.

## 2.2 தலைப்பிற்கான நுழைவு

----------------------------------------

பின்வரும் விடயங்கள் கணக்காய்விற்கான நுழைவினை வழங்கியிருந்தது.

(அ) வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் செயற்திட்டத்திற்காக 2013 இலிருந்து 2019 வரை அரசாங்கம் செலவு செய்த ரூபா 7,600,128,381 பெறுமதிக்கான செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படல்.

(ஆ) வீடமைப்பு செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் தோட்ட முகாமைத்துவத்தின் மூலம் வெளிப்படைத்தன்மை இன்றி மற்றும் முறையான நடைமுறையன்றி வீட்டு நலனாளிகளைத் தெரிவுசெய்வதற்கும், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட நலனாளிகளை முறையாகத் தெரியப்படுத்தி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கடனை மீளஅறவீடு செய்வதற்குத் தேவையான ஏடுகளைப் பராமரித்து அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய பணத்தை முறையாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை.

(இ) பெருந்தோட்ட மானிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற செயற்திட்டங்களின் ஒப்பந்தங்கள் தொடர்பான மதிப்பீடுகளை சான்றுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்து அதாவது ஆலோசனை சேவைகளை வழங்குதல், ஒப்பந்தக்காரரைத் தெரிவுசெய்தல், நிர்மாணங்களுக்காக அவர்களுக்கு கொடுப்பனவு செய்தல் முதலியன அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்கு முரணாக பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் தோட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை.

(ஈ) அதற்கிணங்க ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அனைத்து பணமும் அமைச்சினால் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டு பின்னர் அவர்களினால் ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தும் ஒப்பந்தகாரர்களால் அப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு அமைச்சினால் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.

(உ) அவ்வாறு அரசாங்கத்தின் பணத்தை பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு நேரடியாக வழங்குவதற்கான அங்கீகாரம் இன்றுவரை திறைசேரியிடமிருந்தேனும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமை.

(ஊ) அவ்வாறே பௌதீகப் பரிசோதனை செய்த வீடுகளுக்கு பயன்படுத்திய மூலப்பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமற்ற, தரம் குறைந்த நிலையின் காணப்பட்டவை எனவும் பயிற்சியற்ற வேலையாட்கள் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு நியமதரமின்றி நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பொறுப்பேற்பதற்கு நலன்பெறுனர்கள் மறுத்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையும் அதனால் அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்து மேற்கொள்ளப்படுகின்ற இச்செயற்திட்டத்தின் செயலாற்றலையும் விளைதிறனையும் மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான நோக்கெல்லையும் நோக்கெல்லையின் மட்டுப்பாடும்

### 2.3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

என்னால் மீயுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (300-320) இணங்க எனது இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் நுவரெலியா, ஹற்றன் தோட்ட மக்களுக்கு மிகவும் உயர்ந்த வாழ்க்கை நிலைமையுடன் கௌரவமாக வாழ்வதற்கு வீட்டு வசதிகளை வழங்குவது தொடர்பாக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புச் செயற்திட்டத்தின் சிக்கனத்தன்மை, ஆக்கபூர்வத்தன்மை, விளைதிறன், உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் ஈடுபடுத்தட்டுள்ளமை ஏடுகளும் பதிவேடுகளும் முறையாகப் பேணப்படுகின்றமை என்பது தொடர்பாக கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்பட்டது.

### 2.3.2 நோக்கெல்லையை மட்டுப்படுத்தல்

அமைச்சினால் பராமரிக்கப்பட வேண்டிய எனினும் கீழே தரப்படுகின்ற ஏடுகள் பராமரிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வு செய்தல் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் இருக்கவில்லை.

(அ) செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து தற்பொழுதுவரை நலன்பெறுனர்களிடமிருந்து கடனை அறவீடு செய்தல் மற்றும் ஏதாவது ஒரு திகதியில் அறவிட வேண்டிய மீதி தொடர்பாக பரீட்சிப்பதற்கு அமைச்சினால் ஏடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து தற்பொழுது வரை வீடுகள் வழங்கப்பட்ட நலன்பெறுனர்களின் பெயர்களுடன் தொடர்புபட்டவைகள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு அமைச்சினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஒப்பந்தக்காரரின் கீழ் ஒப்பந்தம் தொடர்பான தகவல்களும் கொடுப்பனவுகளும் நிறுத்திவைத்தல்கள் முதலிய தகவல்களை உள்ளடக்கிய ஒரு பதிவேடு அமைச்சினால் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்காய்வின் குறிக்கோள்களும் வரையறைகளும்

-----------------------------------------------------------------------------------------

பிரதான குறிக்கோள் : மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் ஹற்றன் மற்றும் நுவரெலியா வலயங்களில் தோட்ட மக்களுக்கு வீடுகளை வழங்கும் செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்.

**உப குறிக்கோள்களும் வரையறைகளும்**

---------------------------------------------------------------------

| உப குறிக்கோள் | வரையறைகள் |
|---|---|
| i. நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடல் | • செயல்நடவடிக்கைத்திட்டம்<br>• செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வு அறிக்கையும் தொடக்க ஆய்வு சம்பந்தமான தகவல்களும். |
| ii. பொருத்தமான நபர்கள் வீட்டு நலன்பெறுனர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களா | • அமைச்சரவை தீர்மானம்<br>• அமைச்சு சுற்றறிக்கை<br>• நலன்பெறுனர்களைத் |

| | | |
|---|---|---|
| | என்பதை மதிப்பீடு செய்தல். | தெரிவுசெய்வதற்காக தயாரிக்கப்பட்ட வரையறைகள்.<br>• அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான வழிகாட்டிக் கையேடு. (2009-2014)<br>• அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான வழிகாட்டிக் கையேடு. (2017) |
| iii. | செலவு செய்யப்பட்ட பணத்திற்குப் பொருத்தமான தரத்துடன் நிர்மாணிக்கப்பட்டதா என்பதனைப் பரீட்சித்தல். | • பெறுகை வழிகாட்டியும் பெறுகைக் கையேடும்.<br>• கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் ஆபத்து முகாமைத்துவப் பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய அறிக்கைகள்<br>• மேற்கூறப்பட்ட அறிக்கைகளுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டது என்பதற்காக பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்.<br>• நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பௌதீகரீதியாகப் பரீட்சித்தல்.<br>• நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களுக்காக வழங்கப்பட்ட சுற்றறிக்கை.<br>• அமைச்சு பேணவேண்டிய ஏடுகளும் கணக்குகளும்<br>• நுவரெலியா மாவட்ட செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் கிரீன் கோல்ட் வீடமைப்புச் செயற்திட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் ஒரு வீட்டினை நிர்மாணிப்பதற்காக செலவு செய்ய வேண்டியிருந்த ரூபா 1,603,045 மொத்த |

| | | |
|---|---|---|
| | | கிரய மதிப்பீடு. |
| iv. | ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவு செய்தல்களைப் பரீட்சித்தல் முறையான நடைமுறைக்கு இணங்க இடம்பெற்றுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல். | • பெறுகை வழிகாட்டியும் பெறுகைக் கையேடும்.<br>• நிதிப் பிரமாணம். |
| v. | வீடுகள் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதனையும் உரிய நபர்கள் அந்த வீடுகளில் வசிக்கின்றார்களா என்பதனையும் மதிப்பீடு செய்தல். | • அமைச்சின் நலன்பெறுனர்கள் தொடர்பான வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான வழிகாட்டல்கள். |
| vi. | இச்செயற்திட்டத்திலிருந்து பிரதான ஏற்றுமதி வருமானத்தை வழங்கும் தேயிலை பெருந்தோட்ட கைத்தொழிலுக்கும் அதிலிருந்து நாட்டுக்குமான விளைதிறனை மதிப்பீடு செய்தல். | • மத்திய வங்கி அறிக்கை<br>• நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பௌதீகரீதியாகப் பரீட்சித்தல். |

## 2.5 கணக்காய்வு நடைமுறை

------------------------------------------

(அ) ஆவணரீதியான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல்.

- (i) அமைச்சின் ஏடுகள் பதிவேடுகளைப் பரீட்சித்தல்.
- (ii) வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக அமைச்சு சமர்ப்பித்த அமைச்சு விஞ்ஞாபனம், நிதி அமைச்சின் அவதானிப்புக்கள், அமைச்சரவை தீர்மானம் என்பவற்றை ஆய்வுசெய்தல்.
- (iii) செயல்நடவடிக்கைத் திட்டம், செயல்முன்னேற்ற அறிக்கை, செயலாற்றல் அறிக்கை என்பவற்றை ஆய்வு செய்தல்.
- (iv) பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பிராந்திய மற்றும் தலைமை அலுவலகத்தின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலும் பரீட்சித்தலும்.

(ஆ) ஏனைய உறுதிப்படுத்தல்கள்

(i) அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் நலன் பெறுனர்களுடன் கலந்துரையாடல்.

(ii) வீட்டு நிர்மாணங்களை பௌதீகரீதியாகப் பரீட்சித்தல்.

(iii) உள்ளகக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

(iv) தோட்ட கூட்டுறவு சங்க மாதிரியைப் பரீட்சித்து அவர்களுடன் கலந்தாலோசித்து தேவையான தகவல்களைப் பெற்று பரீட்சித்தல்.

## 2.6 தோட்டத்துறை தொடர்பான அடிப்படைத் தரவுகள்

---

### 2.6.1 காணிகள் தொடர்பான விபரம்

---

| தோட்ட வலயம் | நுவரெலியா | ஹற்றன் | பதுளை | கண்டி | இரத்தினபுரி | காலி | கேகாலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தோட்டக் கம்பனிகளின் எண்ணிக்கை | 9 | 7 | 7 | 6 | 5 | 7 | 6 | 23 |
| தோட்டங்களின் எண்ணிக்கை | 72 | 67 | 69 | 60 | 59 | 57 | 69 | 453 |
| மொத்தக் காணிகளின் அளவு ஹெக்டேயர் | 30,169 | 29,795 | 38,388 | 33,722 | 35,912 | 34,419 | 39,561 | 241,966 |
| தேயிலை ஹெக்டேயர் | 20,196 | 14,443 | 18,540 | 13,086 | 5,251 | 2,672 | 1,051 | 75,239 |
| இறப்பர் ஹெக்டேயர் | 125 | - | 1,711 | 666 | 11,511 | 8,470 | 14,945 | 37,304.25 |
| இறப்பர் ஹெக்டேயர் | - | - | 17 | 533 | 182 | 523 | 13,788 | 15,043 |
| ஓயில்பாம் ஹெக்டேயர் | - | - | 465 | 3,338 | 1,443 | 7,050 | 2,798 | 15,094 |
| ஏனையவை | 2,855 | 2,629 | 4,296 | 134 | 1,654 | 2,334 | 1,360 | 15,262 |
| பயிரிடப்படாத காணிகளின் அளவு ஹெக்டேயர் | 7,116 | 12,723 | 13,358 | 15,962 | 15,870 | 13,370 | 13,235 | 91,634 |

மூலம்: பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் மேற்பார்வை செய்யப்படுகின்ற 23 தோட்டக் கம்பனிகள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் வாயிலாக)

### 2.6.2 தோட்டக் குடித்தொகைத் தகவல்கள்

--------------------------------------------------------------

| தோட்ட வலயம் | நுவரெலியா | ஹற்றன் | பதுளை | கண்டி | இரத்தினபுரி | காலி | கேகாலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தோட்டங்களில் வசிக்கின்ற குடித்தொகை | 230,073 | 217,104 | 186,781 | 129,502 | 113,487 | 63,727 | 57,698 | 998,372 |
| தோட்டங்களில் வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை | 58,506 | 56,533 | 48,656 | 32,918 | 29,683 | 16,692 | 15,614 | 258,602 |
| தோட்ட சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை | 28,242 | 29,428 | 18,867 | 11,768 | 10,754 | 6,091 | 6,495 | 111,645 |
| தோட்டங்களில் குடியிருக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கையில் சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை (சதவீதமாக) | 48 | 52 | 38.77 | 35.75 | 36.22 | 36.49 | 41.59 | 43.51 |

முழுக்குடித்தொகை:- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பிரகாரம்.

### 2.6.3 தோட்டங்களில் காணப்படுகின்ற வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்புச் செயற்திட்டங்கள்.

------------------------------------------------------------------------------------------------------------------------------------

பெருந்தோட்ட மக்கள் குடியிருக்கும் லைன் வீடுகள் ''லைன் அறைகள்'' ஆக அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவ்வீடுகள் தற்போது உடைந்த நிலையில் காணப்படுகின்றமையும் துணைக்குடும்பங்கள் உருவாகுவதனால் பல குடும்பங்கள் ஒரே அறையினுள் வசிக்க வேண்டி ஏற்படுவதனைப் போல பல்வேறு ஒழுங்கீனங்களுக்கு

உள்ளாகுதல், பாதுகாப்பின்மை, சமூக ஏற்றுக்கொள்ளல் இல்லாமை, சுகாதாரத்திற்கும் சிறுவர்களின் கல்விக்கும் பொருத்தமற்ற சூழல் காணப்படுகின்றமை உள்ளடங்கலாக பல சமூகச்சிக்கல்கள் இதன் மூலம் உருவாகியுள்ளமை காணப்படுகின்றது. அதற்கிணங்க அரசாங்கம் மற்றும் தனியார் தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணி இல்லாத லைன் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்கும் அதன்போது அதற்காக செலவுசெய்கின்ற பணத்திலிருந்து ஒரு சதவீதத்தை நலன்பெறுனர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் மிகுதி சதவீதத்தை அரசாங்கம் செலவு செய்வதற்கும் 2015 நவம்பர் 19 ஆந் திகதிய அமைப/15/1644/739/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

### 2.6.4 தோட்டங்களில் காணப்படுகின்ற வீடுகள்

---

| | 07 வலயங்களின் மொத்தம் | நுவரெலியா வலயம் | ஹற்றன் வலயம் |
|---|---|---|---|
| | அலகுகள் | அலகுகள் | அலகுகள் |
| சோடி வீடுகள் | 29,197 | 6,894 | 5,425 |
| தனி அலகு லைன் வீடுகள் | 73,130 | 12,913 | 13,410 |
| இரட்டை லைன் வீடுகள் | 68,628 | 16,318 | 15,497 |
| தற்காலிக வீடுகள் | 15,480 | 2,688 | 4,071 |
| மாடி லைன் வீடுகள் | 508 | 142 | 185 |

(மூலம்: பெருந்தோட்ட மானிட அபவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு சமர்ப்பித்த தகவல்களின் வாயிலாக - 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பெருந்தோட்டத்தில் காணப்படுகின்ற வீடுகள் தொடர்பான மேலதிக விபரம் கீழே தரப்படுகின்றன.

### (i) தனி வீடுகள் (Single line houses)

---

முன்பக்கம் வறாந்தா உடனான ஒரு தனி அறையை உள்ளடக்கியதாகும். வறாந்த சதுர அடி (sq.ft) 25 ஆகும். முழு வீடும் 264 சதுர அடி ஆவதுடன் அது வறாந்தையும், படுக்கை அறையையும் சிறிய சமையலறையும் உள்ளடக்கியுள்ளது. பெருந்தோட்ட துறையில் இவ்வாறான 11,599 அளவான லைன் வீடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அதற்கு 73,130 அளவிலான வீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 81,900 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றார்கள்.

**(ii) இரட்டை லைன் வீடுகள் (Double line houses)**

---------------------------------------------------------------------------

இரட்டை வீடுகளானது முன்பக்க விறாந்தையுடன் ஒரு பக்கத்திற்கு வரிசையாக அமைந்த அறைகளை (10-12) உள்ளடக்கியுள்ளன. இதன் இரு பக்கங்களிலும் 02 குடும்பங்கள் வசிக்கின்றன. நிலத்தின் அளவு 145-175 சதுர அடியாகும். தற்பொழுது இவ்வாறான 5,468 வீடுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்கு 68,628 வீடுகள் உள்ளடங்கியுள்ளன. 76,305 அளவிலான குடும்பங்கள் இவ்வீடுகளில் வசிக்கின்றமை இனங்காணப்பட்டுள்ளது.

**(iii) தற்காலிக வீடுகள்**

------------------------------

பெருந்தோட்டத்துறையில் துணைக்குடும்பங்கள் அதிகரித்து வருவதுடன் காணப்படுகின்ற லைன்வீடுகளின் அளவானது அத்துறையிலுள்ள வேலையாட்களுக்கும் போதியதாக இல்லாததனால் காணப்படுகின்ற லைன் வீடுகளுக்கு அருகாமையில் காணிகள் உள்ள இடங்களில் தற்காலிக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தகரங்களும் தார்சீட்டுக்களும் பயன்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த வீடுகள் மிகவும் குறைந்த வசதிகளைக் கொண்டதாகும். தோட்டத்துறையில் இவ்வாறான 15,480 வீடுகளில் 15,480 இற்கு மேற்பட்ட அளவான குடும்பங்கள் வசிக்கின்றார்கள்.

தகவல் மூலம்: (பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பின் தரவு மீளாய்வு அறிக்கை மற்றும் 2018 மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றல் அறிக்கை)

### 2.6.5 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தகவல்களின் பிரகாரம் இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை

---

| | பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்குச் சொந்தமான 07 தோட்ட வலயங்களின் மொத்தம் | நுவரெலியா வலயம் | ஹற்றன் வலயம் |
|---|---|---|---|
| தோட்ட சேவையில் ஈடுபட்டுள்ள தோட்டங்களில் அமைந்துள்ள லைன் மற்றும் தற்காலிக வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை | 111,645 | 28,242 | 29,428 |

| | | | |
|---|---|---|---|
| தோட்டங்களில் வசிக்கின்ற முழுக் குடும்பங்களின் எண்ணிக்கை | 258,602 | 58,506 | 56,533 |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை | 6,706 | 1,920 | 1,470 |
| தோட்ட சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்காக மேலும் தேவைப்படுகின்ற வீடுகள் | 104,939 | 6,322 | 27,958 |
| தோட்டங்களில் குடியிருக்கும் அனைத்துக் குடும்பங்களுக்காக மேலும் தேவைப்படுகின்ற வீடுகள் | 251,896 | 56,586 | 55,063 |

(மூலம்: பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு சமர்ப்பித்த தகவல்களின் வாயிலாக- 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

## 2.7 செயற்திட்டம் தொடர்பான நிறுவனரீதியான ஆயத்தப்படுத்தல்

---

### 2.7.1 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் உள்நாட்டு நிதிகளிலிருந்து அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

---

இருப்பிடம் சம்பந்தமாக பெருந்தோட்ட மக்கள் அனுபவிக்கின்ற சிக்கல்களை நீக்கி கௌரவத்துடன் வாழும் உரிமை பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைக்கும் விருப்புடன் அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ‘‘தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்’’ 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் ‘‘புதிய வாழ்வாதார வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்’’ ஆகவும் 2015 ஆம் ஆண்டின் போது 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டமாகவும் அமுல்படுத்தப்பட்டது. இவ் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து ‘‘ பசுமையான தங்க வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்’’ ஆக அமுல்படுத்தப்பட்டதுடன் அவை ஒப்பந்த அடிப்படை, நலனாளிகள் தலையீட்டின் அடிப்படை ஆகிய இரண்டு வகைகளாக அமுல்படுத்தப்பட்டன. வீட்டின் உரிமை மாத்திரமின்றி 7 பேச்சஸ் காணியின் உரிமையையும் ஒப்படைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்து

சமர்ப்பிக்கப்ட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது. (2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகள் தொடர்பாக எதுவித தகவல்களும் இல்லாததுடன் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான கிரயம் மற்றும் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தில் செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | **அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புச் செயற்திட்டத்தின் வகை** | **ஆண்டு** | **செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை.** | **ஹற்றன் வலயத்தின் கீழ் பூர்த்தி செய்த வீடுகளின் எண்ணிக்கை.** | **நுவரெலியா வலயத்தின் கீழ் பூர்த்தி செய்த வீடுகளின் எண்ணிக்கை.** |
|---|---|---|---|---|---|
| | | 2011 | 186 | 0 | 20 |
| அரசாங்க நிதி ஏற்பாட்டின் கீழான வீடமைப்புச் செயற்திட்டம் | புதிய வாழ்வாதார வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 2012 | 170 | 0 | 0 |
| | | 2013 | 234 | 50 | 14 |
| | | 2014 | 222 | 22 | 50 |
| | | 2015 | 47 | 0 | 0 |
| | | 2016 | 320 | 44 | 95 |
| | | 2017 | 10 | 10 | 0 |
| | | 2018 | 0 | 0 | 0 |
| | | 2019 | 0 | 0 | 0 |
| 75 | பசுமையான தங்க வீடமைப்பு | 2016 | 492 | 77 | 188 |
| | நிகழ்ச்சித்திட்டம் மற்றும் | 2017 | 818 | 221 | 159 |
| | நலன் பெறுனர்களின் தலையீட்டுடனான வீடமைப்பு செயற்திட்டம் | 2018 | 547 | 75 | 122 |
| | | 2019 | 777 | 365 | 187 |
| | 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டம் (இன்னல்களுக்கு உட்பட்டவர்கள்) | 2015 | 338 | 62 | 147 |
| | பசுமையான தங்க வீடமைப்பு (இன்னல்களுக்கு உட்பட்டவர்கள்) | 2018 | 88 | 0 | 0 |
| | | 2019 | 136 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள். | 2017 | 420 | | |
| | 2018 | 750 | 543 | 938 |
| | 2019 | 1251 | | |
| மொத்தம் | | 6706 | 1470 | 1920 |

(மூலம் - அமைச்சு சமர்ப்பித்த தகவல்களின் வாயிலாக)

**(அ) புதிய வாழ்வாதார வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

---

இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 4 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன. ஒரு வீட்டிற்காக ரூபா 240,000 உதவிப் பணமும் ரூபா 275,000 கடன் பணமுமாக ஒரு வீட்டிற்கு ரூபா 515,000 தொகை கீழே குறிப்பிட்டவாறு செலுத்தப்பட்டது.

| கட்டம் | விபரம் | கடன் பணம் | உதவிப் பணம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| கட்டம் I | திட்ட வரைபடம் தயாரித்து நலன்பெறுனர்களைத் தெரிவு செய்து அத்திவாரம் முழுமையாகப் பூர்த்தி செய்தல் | 69,000 | 11,000 | 80,000 |
| கட்டம் II | அத்திவாரம் பூரணப்படுத்தப்பட்டு வீட்டுச் சுவர் கட்டப்பட்டு கூரையின் கட்டமைப்பை தயார்படுத்தி கூரைத் தகடுகளைக் கொள்வனவு செய்தல் | 76,000 | 159,000 | 235,000 |
| கட்டம் III | கூரையை பூரணப்பபடுத்தி வீட்டுச் சுவரினைக் கட்டி பூச்சு பூசி தரைக்கு சீமெந்து இட்டு மலசலகூடத்தை பூர்த்தி செய்தல் | 95,000 | 60,000 | 155,000 |
| கட்டம் IV | வீட்டின் மின்சாரம் மற்றும் நீர் வசதி சேவைகளைத் தவிர்த்து ஏனைய அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் பூர்த்திசெய்தல் | 35,000 | 10,000 | 45,000 |
| | | 275,000 | 240,000 | 515,000 |

**(ஆ) பசுமையான தங்க வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

---

இவ்வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சின் மூலம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் ஒரு வீட்டின் பெறுமதியில் ரூபா 494,000 தொகையானது 4% வட்டி விகிதத்தின் கீழான கடன் அடிப்படையிலானதுடன் மிகுதி ரூபா 506,000 தொகையானது அமைச்சினால் பொறுப்பேற்கப்படுகின்றது. மேற்கூறிய கடன் பணத்தை மீள அறவீடு செய்வதற்கு மாதாந்த தவணைப்பணம் ரூபா 3,800 ஆக 180 தவணைகளில் அறவீடு செய்வதாக காட்டப்பட்டிருந்தது.

அமப/17/0306/739/002 ஆம் இலக்க 2017 பெப்ரவரி 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் மேற்கூறிய வீடுகளுக்காக ஒரு வீடு ரூபா 1,000,000 பெறுமதியில் ரூபா 480,000 மானியமாகவும் ரூபா 520,000 கடனாக வழங்குமாறு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) நலன் பெறுனர் தலையீட்டிலான வீடுகள்**

---

2018 ஆம் ஆண்டில் நலன் பெறுனர்கள் தலையீட்டிலான வீடுகளுக்கான வழிகாட்டல்கள் கையேட்டின் பிரகாரம் ஒரு வீட்டிற்காக 7 பேச்சஸ் காணி வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு வீட்டின் பரப்பளவு 556 சதுர அடியாகும். அது ஒரு இருக்கை அறை, ஒரு வறாந்தா, 2 படுக்கை அறைகள், ஒரு சமையலறை, ஒரு மலசலகூடம் என்பவற்றுடனாகும். ஒரு வீட்டின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,000,000 ஆகும். அதற்கு மத்தியில் ரூபா 494,000 கடனும் ரூபா 506,000 மானியமுமாகும். கடன் தவணைப்பணத்தை 15 ஆண்டுகளில் செலுத்துவதற்கு வழிகாட்டியில் காட்டப்பட்டுள்ளது.

**(ஈ) இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்**

---

**(i) 4000 வீடுகளை நிர்மாணித்தல்**

---

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் உள்நாட்டில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புசசெயற்திட்டத்தில் 4000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2016/01/18 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் இந்திய துாதரகத்திற்கும் அமைச்சிற்கும் இடையே பரிமாறப்பட்ட ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கும் ஒரு வீட்டிற்கு ரூபா 950,000 தொகையை

இந்திய அரசாங்கத்தால் செலவு செய்வதற்கும் நலன் பெறுனர் ரூபா 20,000 தொகையான ஊழிய பங்களிப்பை வழங்குவதற்கும் அந்த வீட்டை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணிகளைத் தெரிவு செய்து நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளுக்காக உரிய பெருந்தோட்டக் கம்பனியின் மூலம் ஒரு வீட்டிற்காக ரூபா 30,000 வீதம் செலவு செய்ய வேண்டும் எனவும் செயற்திட்டத்தை 03 ஆண்டுகள் காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வசதிகளை வழங்குவதற்கும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதியில் 1.5% இனை செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் செலுத்துவதற்கும் அதற்கு மேலதிகமாக ஒரு வீட்டிற்கு ரூபா 120,000 தொகையாக இருக்கும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பில் உரிய அரசாங்க நிதி ஏற்பாட்டிலிருந்து கொடுப்பனவு செய்வதற்குமாக அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 2016/02/03 ஆந் திகதிய அபைப/16/0120/739/002 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வசதிகளை வழங்குவதற்கு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள்.

- உரிய வீடமைப்பு செயற்திட்டத்திற்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு தோட்டக் கம்பனிகளிடமிருந்து காணிகளை ஒதுக்கி வைத்தல்.
- உரிய காணி பொருத்தமானது என்பதற்கு தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்.
- வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான வகையில் காணியை தயார்படுத்தும் தொடக்க அளவீட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் செயற்படுத்துதலும்.
- உரிய வீடமைப்புச் செயற்திட்டத்தின் நலன் பெறுனர்களது பெயர்ப்பட்டியல் தொடர்பாக சிபாரிசுகளை வழங்குதல்.

- நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வீடுகளை நிர்மாணிப்பதற்காக உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டு அது தொடர்பாக அமைச்சிற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- உரிய வீடமைப்புச் செயற்திட்டத்தின் நலன் பெறுனர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்.
- உரிய வீடமைப்புச் செயற்திட்டங்களில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் பூர்த்தி செய்யப்படுகின்ற வீடுகளின் செயல் முன்னேற்றம் மற்றும் குறைபாடுகளை தொடர்ச்சியாக அமைச்சிற்கு தெரியப்படுத்தலும் அறிக்கை வழங்குதலும்.

**(ii) 10000 வீடுகளை நிர்மாணித்தல்**

------------------------------------------------------

2018 பெப்ரவரி 07 ஆந் திகதிய CM/02/2018 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் 4000 வீடுகளை நிர்மாணிக்கும் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு மேலதிகமாக இந்திய உதவியின் கீழ் 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்ளுமாறு 10/0296/739/002 ஆம் இலக்க 2018 பெப்ரவரி 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்போது அவ்வாறே 2019 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கௌரவ அமைச்சரினால் சமர்ப்பிக்கப்ட்ட அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் இச் செயற்திட்டம் தொடர்பான 10000 வீடுகளில் 5000 வீடுகளை நிர்மாணிக்கும் தொடக்க நடவடிக்கைகளுக்காக தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வசதிகளை வழங்குவதற்கும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பிற்கு செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதியில் 1.5% இனை செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம் செலுத்துவதற்கும் இதற்கு மேலதிகமாக ஒரு வீட்டிற்கு ரூபா 150000 ஆக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்து செலுத்துவதற்கான அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய அமைப/19/2239/124/002–i ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**2.7.2 வீடமைப்புச் செயற்திட்டம் சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட வழிகாட்டல் கையேடு**

(அ) வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம், நிதி அமைச்சின் அவதானிப்புக்கள் மற்றும் அமைச்சரவை தீர்மானம் என்பன பிண்ணினைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(ஆ) வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான வழிகாட்டல் கையேடு**

**(i) 2019-2014 அமுல்படுத்தல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்புடன் இணைந்து அமுல்படுத்தப்படுகின்ற “புதிய வாழ்க்கை தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2009” என்ற வழிகாட்டல் கையேடு 2010 யூலை 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பொழிப்பாக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

- நலன்பெறுனர்களை தெரிவுசெய்தலானது ஆரோக்கிய மற்றும் சுகாதார வசதிகளில் ஆகக்குறைந்த மட்டத்தில் இருக்கின்ற நிரந்தர வீடுகள் இல்லாத தோட்ட வேலையாட்களையாகும்.

- நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளின் அளவு 550 சதுர அடிக்கு அண்மித்த அல்லது அதற்கு மேற்பட்ட இடவசதிகள் உள்ள ஒரு வீடாகும்.

- வீட்டின் பெறுமதி ரூபா 440,000 ஆனதுடன் ரூபா 200,000 தொகையானது 7.5% வட்டியின் கீழ் கடன் பணமாகவும் மிகுதி ரூபா 240,000 தொகையானது உதவியாகவும் அமுல்படுத்துகின்ற நிறுவனங்களாக அமைச்சின் தோட்ட வீடமைப்பு பிரிவு, வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு என்பவற்றின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு,

தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், தோட்ட அதிகாரசபை, தோட்டக்கம்பனிகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

- நலன்பெறுனர்களாகத் தெரிவுசெய்யப்படுவது தேசிய வீடமைப்பு அதிகாரசபை, பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு, தோட்ட வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் பங்குபற்றுதலூடான ஒரு குழுவினால் பின்வரும் வசதிகளைக் கொண்ட நபர்களையாகும்.

    - புதிய வாழ்க்கை வீடமைப்புச் செயற்திட்டத்தின் ஒரு வீட்டிற்கு உரிமையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு விருப்பமுள்ள குடும்பம்

    - தற்காலிக வீடுகளில் குடியிருக்கும் குடும்பம்

    - விதவைகளை குடும்பத்தலைவர்களாகக் கொண்ட குடும்பம்

    - வயதான நபர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் உள்ள குடும்பம்

    - ஏனைய இன்னல்களால் சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ள குடும்பம்

- நிலத்தை தயார்படுத்தும் சந்தர்ப்பத்தில் நீர் மற்றும் வீதியை தயார்படுத்துவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு என்பவற்றினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, தோட்ட வீடமைப்பு பிரிவு, தோட்ட வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் என்பன நலன்பெறுனர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

- வீடமைப்பு நிதி உதவிகளை விடுவித்தலானது முதலாவது கட்டத்தின் கீழ் ரூபா 80,000 தொகையும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 210,000 தொகையும் மூன்றாம் கட்டத்தின் கீழ் ரூபா 130,000 தொகையும் நான்காம் கட்டத்தின் கீழ் ரூபா 20,000 தொகையுமாகும்.

- வீடமைப்புச் செயற்திட்டத்தின் தொடக்க ஆண்டிலிருந்து கடனை அறவீடு செய்தல் ஆரம்பிக்க வேண்டும் எனவும் 28 ஆண்டுகளுக்குள் அறவிட வேண்டும் எனவும்

- 4% நிருவாகச் செலவுகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு மாதமும் 10 ஆந் திகதிக்கு முன்னர் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி செயல்முன்னேற்றத்தை அமைச்சிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

**(ii) 2017 வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான வழிகாட்டிக் கையேடு**

---

- புதிய வழிகாட்டிக் கையேட்டின் பிரகாரம் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் வரையறைகள் பின்வருமாறு இருக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது.

  - தோட்டத்தில் பதிவு செய்த ஒரு ஊழியராக இருத்தல் வேண்டும்.

  - தற்பொழுது லைன் வீடு அல்லது தற்காலிக குடிசைகளில் குடியிருத்தல் மற்றும் வீடுகள் கிடைத்ததன் பின்னர் அந்த வீடுகளை ஒப்படைத்தல் வேண்டும்.

  - தோட்ட ஊழியர் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

  - கடந்த 5 ஆண்டுகளில் தோட்டத்தில் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

  - நேரடியாக அல்லது மறைமுகமாக வீடுகளுக்காக வசதிகளைப் பெற்றுக்கொள்ளாதிருத்தல்

  - 50 வயதிற்கு குறைவாக இருத்தல்

- வீடுகளுக்காக வழங்கப்படுகின்ற ரூபா 650,000 தொகையில் ரூபா 340,000 தொகை கடன் அடிப்படையிலும் ரூபா 310,000 தொகை உதவியாகவும் வழங்கப்படுவதுடன் 4% வட்டியின் கீழ் 12 ஆண்டுகளுக்குள் செலுத்துதல் வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது.

**(iii) 2018 நலன் பெறுனர்களின் தலையீட்டின் அடிப்படையிலான வீடுகளுக்கான வழிகாட்டல் கையேடு**

---

- ஒரு வீட்டிற்கு 7 பேச்சஸ் காணி வழங்கப்பட்டுள்ளது என்பதுவும் ஒரு வீட்டின் பரப்பளவு 556 சதுர அடி என்பதுவும் அதில் ஒரு இருக்கை அறை, ஒரு வறாந்தா, 2 படுக்கை அறைகள், ஒரு சமையலறை, ஒரு மலசல கூடம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதுமாகும்.

- ஒரு வீட்டின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா. 1,000,000 ஆகும். அதில் ரூபா.494,000 கடன் மற்றும் ரூபா. 456,000 மானியம் என்பதுடன் கடன் தவணைப் பணத்தை 15 ஆண்டுகளில் செலுத்துவதற்கு நலன்பெறுனர்களின் குழுவை தோற்றுவிக்கும் போது ஒரு குழுவிற்கு 5-8 அங்கத்தவர்கள் இருத்தல் வேண்டும்.

- வீடமைப்புக் குழுவினது தோட்ட ஊழியர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கொண்ட குழுவின் தலைவரை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

- தொழில் நுட்ப உத்தியோகத்தர் மாதாந்த செயல் முன்னேற்ற அறிக்கையினை அடுத்துவரும் மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டியதுடன் முகாமைத்துவ கட்டணமாக முகவர் நிறுவனத்திற்கு ஒப்பந்தப் பெறுமதியில் 7% செலுத்துதல் வேண்டும்.

- வீட்டை நிர்மாணிப்பதற்கு வழங்கியுள்ள காலம் 06 மாதங்களாகும்.

- 2018 ஆம் ஆண்டின் வழிகாட்டியின் பிரகாரம் வீட்டுக்கான கடன் பணத்தின் மாதாந்த தவணைப் பணம் ரூபா 3,800 வீதம் 180 மாதங்களுக்குள் அறவீடு செய்யப்படுதல்.

**2.7.3 செயற்திட்டத்தின் முகாமைத்துவ உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினை ஈடுபடுத்துதல்**

---

பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் பிணையால் வரையறுக்கப்படட ஒரு கம்பனி ஆனதுடன் அமைப்பு அகவிதியின் 44 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்படுகின்ற 11 பணிப்பாளர்களுக்கு மத்தியில் நான்கு நபர்கள் அரசாங்க அமைச்சின் மேலதிக செயலாளர்களால் நியமிக்கப்படுகின்ற நபர்களாக இருத்தல் வேண்டும். அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் 10 பணிப்பாளர்கள் இருந்ததுடன் அவர்களில் 3 பணிப்பாளர்கள் 3 அரசாங்க அமைச்சுக்களிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர். நிருவகிக்கும் அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லாத இந்த பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு 2005 திசெம்பர் 08 ஆம் திகதி வர்த்தமானியின் மூலம் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கீழ் பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2006 நவம்பர் 30ஆம் திகதி இளைஞர் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயற்பாடுகளுக்காக அந்த நிறுவனத்தின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு கட்டணம் செலுத்துவதன் கீழ் முகாமைத்துவ உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு 2006 திசெம்பர் 07 ஆம் திகதிய அமைப/06/2249/240/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந் நிறுவனமானது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு, பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு ஆகிய இரண்டு பெயர்களில் காட்டப்பட்டிருந்தது.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்களை விபரமாகக் கலந்துரையாடல்

---

### 3.1 நிறுவனத்தின் பின்னணி மற்றும் ஆயத்தமாகுதல்

---

(அ) பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், செயலாற்றல் அறிக்கை என்பவற்றை தயாரிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் இருந்ததனால் ஒவ்வொரு வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்களை தனித்தனியாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

(i) ஒவ்வொரு பிராந்தியம் மற்றும் தோட்டங்கள் வகையில் பிரித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை.

(ii) செயற்திட்டத்திற்கான செயலாற்றல் / செயல் முன்னேற்ற அறிக்கையில் செயற்திட்டத்தின் தொடக்க மற்றும் இறுதித் திகதிகள் காட்டப்பட்டிருக்காமையினால் ஒரு வீட்டினை நிர்மாணிப்பதற்கான 8 மாத திட்டமிடப்பட்ட காலத்தை மிகைத்த செயற்திட்ட தாமதத்தை இனங்காண முடியாமை மற்றும் தாமதங்கள் தொடர்பாக சட்டவிதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை.

(ஆ) பசுமையான தங்க வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டலின் பிராகாரம் ஒரு வீட்டின் பெறுமதியில் ரூபா. 494,000 தொகையானது 4% வட்டி விகிதத்தின் கீழான கடன் அடிப்படையானதுடன் மிகுதி ரூபா. 506,000 தொகையானது அமைச்சினால் செலவு செய்யப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது. எனினும் இந்த வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக அங்கீகாரத்தினை வழங்கிய அமைப/17/0306/739/002 ஆம் இலக்க 2017 பெப்ரவரி 06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் ஒரு வீட்டின் ரூபா. 1,000,000 பெறுமதியில் ரூபா. 480,000 மானியமாகவும் ரூபா. 520,000 கடனாகவும் காட்டப்பட்டிருந்ததனால் வழிகாட்டியும் அமைச்சரவைத் தீர்மானமும் இணங்கியிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) கட்டணம் செலுத்தும் அடிப்படையில் தோட்ட மக்களுக்கு வீட்டு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் வகையில் அங்கீகாரத்தினை வழங்கியிருந்த முகாமைத்துவ சேவையை வழங்கும் பொறுப்பிற்கு மேலதிகமாக நலன்பெறுனர்களைத் தெரிவு செய்தல், ஒப்பந்தங்களை வழங்குதல், கொடுப்பனவு செய்தல் ஆகிய செயற்பாடுகள் அங்கீகாரமின்றி முழுமையாக பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தோட்ட அதிகாரிகளுடன் இச்செயற்திட்டத்தினை ஒருங்கிணைப்புச் செய்தல் அமைச்சிற்குச் சிக்கலானது என காரணங்காட்டி மேற்கூறிய செயற்பாடுகளுக்கு மேலதிகமாக அமைச்சினால் மேற்கொள்ள வேண்டிய மேற்பார்வை நடவடிக்கைகளும் இந்நிறுவனதத்திடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கையில் பெருந்தோட்ட வலயத்தில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதனை முன்னிட்டு பெருந்தோட்ட வலயத்திற்காக 32 ஆம் இலக்க 2018 ஒக்டோபர் 04 ஆந் திகதிய பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் மற்றும் 2018 ஒக்டோபர் 05 ஆம் திகதிய வர்த்தமானியின் மூலம் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்தல் அதிகார சபை என்ற பெயரில் ஒரு அதிகார சபையினைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் கடமைகளும் அப்போதைய மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் பிரதான கடமைகளாகவே இருந்ததுடன் அதனை ஸ்தாபித்து 2020 திசெம்பர் 31 வரை ரூபா. 8,835,016 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எதுவித செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்காததனைப் போல தோட்ட அதிகாரசபையுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அமைச்சிற்கு இல்லாத இயலுமை அதிகார சபைக்கு இருப்பதற்கு வாய்ப்பு இல்லாததன் காரணமாக இந்த அதிகார சபையை தோற்றுவித்ததன் மூலம் அரசாங்கத்திற்கு மேலதிக செலவுச் சுமையை மாத்திரம் மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) இச்செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது திட்டத்திற்கு இணங்க தோட்டங்களில் வீடுகளை வழங்கும் போது தோட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்காக மாத்திரம் வீடுகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் தோட்டங்களில் வசிக்கும் சேவையில் ஈடுபடாத குடும்பங்களுக்காகவும் வீடுகளை வழங்குதல தற்பொழுது இடம் பெற்றுள்ளதுடன் தோட்டங்களில் குடியிருக்கும் குடும்பங்களில் தோட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 43 சதவீதமாகும். அதற்கிணங்க தோட்டங்களில் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடாதவர்களுக்கும் தோட்டங்களில் வசிப்பதற்கு வீடுகளை வழங்கியதன் காரணமாக ஏற்றுமதிப் பயிர்களான விசேடமாக தேயிலைப் பயிர்களுக்கான காணிகளின் அளவு நீண்டகாலத்திற்கு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுகின்ற போது அதிக அளவில் குறைவடைந்து அக்கைத்தொழிலுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.2 நலன் பெறுனர்களைத தெரிவு செய்தல்

---

(அ) புதிய வாழ்க்கை தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக 2009 ஆம் ஆண்டிற்கான வழிகாட்டியின் 7.2 ஆம் இலக்கத்தின் கீழ் நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்யும் போது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் தோட்ட வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தின் பங்குபற்றுதலுடனான ஒரு குழுவின் மூலம் 07 வரையறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் போது அவ்வாறான ஒரு குழுவினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது வெளிப்படுத்தப்படாததுடன் நலன்பெறுகைகளால் இவ்வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக விண்ணப்பங்கள் அனுப்பி வைத்து வேண்டுதல்கள் விடுக்கப்பட்டது என்பதற்கும் அவர்களைத் தெரிவு செய்யும் போது சரியான நடைமுறை பின்பற்றப்பட்டது என்பதற்கும் நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமைச்சினால் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்தல் சரியாகச் செய்யப்பட்டது என்பதற்கு மேற்பார்வையேனும் இல்லாததுடன் அது சம்பந்தமாகப் பரீட்சிப்பதற்கு நலன் பெறுனர்களின் பட்டியலைத் தவிர்த்து ஏனைய எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வீடமைப்புச் செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது வறுமை பீடித்துள்ள ஒரு வீடு சொந்தமாக இல்லாத தேவையான நபர்களுக்கு இந்த வீடு கிடைக்கவில்லை எனவும் அதில் முறையான நடைமுறை பின்பறறப்படவில்லை எனவும் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வீட்டு நலனாளிகளைத் தெரிவு செய்தல் அமைச்சிடம் இல்லாததனாலும் தோட்ட முகாமைத்துவம் மற்றும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு ஆகிய வெளி நிறுவனங்களினால் வீட்டு நலனாளிகள் வெளிப்படைத் தன்மையின்றி தீர்மானிக்கப்பட்டதனால் இந்த ஒழுங்கீனங்கள் இடம் பெற்றிருக்கலாம் என வழங்கப்பட்ட வீடுகளில் வீட்டு நலனாளிகள் குடியிருக்காமை மற்றும் சில வீடுகள் வாடகை அடிப்படையில் வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை ஆகிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) நலன் பெறுனர்கள் தொடர்பான வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான வழிகாட்டிகளின் பிரகாரம் வீட்டு நலனாளிகளைத் தெரிவுசெய்யும் போது தோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியராக இருத்தல் கட்டாயமானதாக இருக்க

வேண்டும் என்பது காட்டப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வீடுகளை வழங்கும் போது மண்சரிவு ஆபத்துக்களுக்கு முகங்கொடுத்த மற்றும் ஆபத்தான பிரதேசங்களிலுள்ள தோட்டங்களில் சேவையில் ஈடுபட்டு குடியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மானியமாகவும் ஏனைய தோட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு கடனும் மானியமும் கலந்த அடிப்படையிலும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அந்த வரையறையினை மீறி வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்பது 2019 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 30 ஆந் திகதி வரை கணக்காய்வினால் பரீட்சித்த ஹற்றன் வலயத்தில் 370 வீடுகளுக்கு மத்தியில் 08 வீடுகளும் நுவரெலியா பிரதேசத்தில் பரீட்சிக்கப்பட்ட 616 வீடுகளில் 06 வீடுகளும் தோட்டத்தில் சேவையாற்றாத நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) வீடுகளை நிர்மாணிப்பது சம்பந்தமான வழிகாட்டிகளுக்கு இணங்க வீடுகளை நிர்மாணிப்பதனை ஆரம்பிப்பதற்கு முன்னர் நலன்பெறுனர்களை இனங்கண்டு பட்டியலைத் தயாரித்து வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்க வேண்டிய போதிலும் ஸ்ரெதடன் தோட்டத்தில் ஸ்ரெதடன் பகுதியின் பழைய செயற்திட்டத்தை நிர்மாணிப்பது தொடர்பாக 2016 திசெம்பர் 21 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 நவம்பர் 30 ஆந் தகதி வரை இந்த 50 வீடுகளுக்காக நலன்பெறுனர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 3.3 வீடுகளை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான காணியைத் தெரிவு செய்தல்

தோட்ட மக்களுக்கு காணி உரிமைகளையும் பொருத்தமான வீட்டு வசதிகளையும் வழங்குவது தொடர்பாக 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய வரைபு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மற்றும் 2017 ஒக்டோபர் 27 ஆந் திகதிய அமைப/17/2281/739/001-III ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அத்திகதியின் பின்னர் வீட்டு ஒப்பந்தங்களை நிர்மாணிப்பதற்காக காணிகளைத் தெரிவு செய்யும் போது பயிர்கள் இல்லாத காணிகளைத் தெரிவு செய்தல் பொருத்தமானது என தெரியப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் 2019 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 29 ஆந் திகதி வரை மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனையின் போது மாதிரிகளுக்கு இணங்க ஹற்றன் மற்றும் நுவரெலியா பிரதேசத்தில் தேயிலை பயிரிடப்பட்ட காணிகள் அண்ணளவாக மொத்தமாக 56.475 ஏக்கரில் பயிரிடப்பட்ட தேயிலை பிடுங்கி அகற்றப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

(அ) ஹற்றன் பிரதேசத்தில் 08 தோட்ட கம்பனிகளின் கீழ் காணப்படுகின்ற 15 ஆம் பிரிவு தோட்டத்தின் 370 வீடுகளுக்கு மத்தியில் 02 தோட்ட கம்பனிகளின் கீழ் காணப்படுகின்ற பிரிவு 02 இன் 40 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அண்ணளவாக 25.5 ஏக்கர் (340*12/160) விளைதிறனான நிலமும் (VP Land) 02 தோட்ட கம்பனிகளின் கீழ் காணப்படுகின்ற 03 பிரிவுகளின் 97 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 7.275 (97*12/160) ஏக்கரில் தேயிலை பயிரிடப்பட்ட காணியாக மொத்தமாக அண்ணளவாக 10.275 ஏக்கரில் பயிரிடப்பட்ட தேயிலைகள் பிடுங்கி அகற்றப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நுவரெலியா பிரதேசத்தில் 18 தோட்டங்களின் கீழ் காணப்படுகின்ற 26 பிரிவுகளின் 616 வீடுகளை நிர்மாணித்த மற்றும் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் வீடுகளை நிர்மாணித்த காணியின் கீழ் தேயிலை பயிரிடப்பட்ட 46.2 ஏக்கர் (616*12 பேச்சஸ்) காணி ஈடுபடுத்தப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 வீடுகளுக்காக மதிப்பீட்டினைத் தயாரித்தல்

---

(அ) 2016 ஆம் ஆண்டில் பசுமையான தங்க வீடுகளின் கீழ் ரூபா 650,000 தொகைக்கு வீட்டினை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அம்மதிப்பீட்டில் Plinth Beam இனை ஈடுபடுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்படாது வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை காலம் தாழ்த்தாது கட்டும்போது மண்ணின் தரம் மற்றும் ஈரத்தன்மை முதலிய விடயங்களின் காரணமாக அத்திவாரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களின் காரணமாக சுவர் உடைதல் மற்றும் வெடிப்பு ஏற்படுதல் வீட்டில் குடியிருப்பதனை ஆபத்தான நிலைக்கு மாற்றலாம் என்பது அவதானிக்கப்பட்டது. உதாரணம்:- டெஸ்போல்ட்(மேல்) – வீட்டு இலக்கம் 13



(ஆ) பசுமையான தங்க வீட்டு மதிப்பீட்டின் மதிப்பீட்டு இலக்கம் 4 தொடர்பாக கூரையினைப் பொருத்துவதற்காக கெல்வனயிஸ் ஆணிகள் பயன்படுத்த வேண்டுமெனக் காட்டபட்டிருக்காததுடன் அக்குறைபாட்டின் காரணமாக கூரையினைப் பொருத்துவதற்கு கல்வனயிஸ் இல்லாத ஆணி பயன்படுத்தியதனால் அந்த ஆணி துருப்பிடிப்பதற்கு உள்ளாகியிருந்தது. அதன் காரணமாக அவ்விடத்தினூடாக வீட்டிற்குள் மழை நீர் கசிந்து செல்லும் சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. உதாரணம்: கபரகல மேல் பகுதி (படம் இலக்கம் 10)



(இ) வீடுகளை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட தேயிலை தோட்டங்கள் ஹற்றன் நகரத்திற்கு அருகாமையிலுள்ள தோட்டத்தைப் போல சில தேயிலைத் தோட்டங்கள் மிகவும் கஸ்டப் பிரதேசங்களில் அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சின் மூலம் ஓரே வகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக மலைகள் உடனான நுவரெலிய, ஹற்றன் போன்ற பிரதேசங்களுக்கும் காலி போன்ற மலைப் பிரதேசம் குறைந்த மாவட்டங்களுக்காகவும் ஓரே மதிப்பீடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக புவி முரண்பாடுகள் பல்வேறுபட்டதான மிகவும் கஸ்டமான பிரதேசங்களில் வீடமைப்புச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அவை இடைநடுவில் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் ஒப்பந்தக்காரர்கள் அடிக்கடி அவற்றின் நிர்மாணத்தில் ஒரு பகுதியை மாத்திரம் மேற்கொண்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. உதாரணமாக:- ஒஸ்போன் தோட்டத்தில் காஸல்ரீப்

பிரிவின் 30 வீடுகள் செயற்திட்டம், வேவெண்டர்ட் செயற்திட்டத்தில் போடோப் தோட்டத்தின் 50 வீடுகள் செயற்திட்டம்.

(ஈ) வீடுகளின் மதிப்பீடானது கைத்தொழில் துறையில் காணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட கட்டிட மதிப்பீடுகளினை விட குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. உதாரணமாக ‘‘கிரீன் கோட் ஹவுசிங்’’ செயற்திட்ட திட்டத்திற்குரிய பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மதிப்பீட்டினை நுவரெலிய மாவட்டத்தில் காணப்படுகின்ற கட்டிடநியம விலை விகிதத்துடன் (BSR) ஒப்பீடு செய்த போது BSR விலை விகிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு இந்த வீட்டு மதிப்பீட்டினை விட 30% ஆல் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது எனவும் நிர்மாணங்களின் தரத்திற்கு அது தாக்கத்தை ஏற்படுத்தலாம் எனவும் அவதானிக்கப்பட்டது.

(உ) இவ்வாறு அளவீட்டுப் பத்திரத்தினை அரசாங்கத்தின் கட்டிட நியம விலை விகிதத்தினை விட அதிக அளவு குறைந்த விலைக்கு தயாரிக்கும் போது ஊழிய பங்களிப்பையேனும் உரிய வீட்டுக்குச் சொந்தகாரரான நலனாளியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டதனால் ஒரு வீட்டின் பெறுமதியை அதிகரிக்கக்கூடியதாக இருந்த போதிலும் அதன் போது வீட்டுச்சொந்தக்காரரின் பங்களிப்பு தொடர்பாக எதுவித குறிப்பும் செய்யப்படாமையின் காரணமாக வீட்டு நலனாளிகள் வீட்டைச் சுற்றி துப்பரவு செய்யும் நடவடிக்கையேனும் செய்யாத நிலைமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) கொடியாகல தோட்டத்தின் உத்தேச 184 வீடுகளில் 42 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் வழங்கிய 2016 மே 23 ஆந் திகதியின் பின்னரே அதாவது 2016 யூன் 08 ஆம் திகதி தேசிய கட்டிட நிறுவனத்தின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் ஆபத்து முகாமைத்துவ பிரிவின் மூலம் உரிய அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அச்சிபார்சுகள் தொடர்பாக கவனம் செலுத்தி செயற்திட்ட திட்டங்களையும் விபரக் குறிப்புக்களையும் தயாரிக்காமையினாலும் அவை பின்பற்றப்படாமையினாலும் ஏற்பட்டுள்ள குறைபாடுகளின் காரணமாக பூர்த்தி செய்யப்பட்ட 42 வீடுகளை வீட்டு நலனாளிகள் பொறுப்பேற்காமையும் அங்கீகரித்த மதிப்பீட்டினை மிகைத்து செலவு செய்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3.5 வீட்டு உரிமையை வழங்குதல்

---------------------------------------------------

(அ) 2015 ஏப்ரல் 08 ஆந் தகதி அமைப/15/0364/612/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தில் காட்டப்பட்டடுள்ளவாறு அது வரை பயன்படுத்திய லயின் அறைகளை மீண்டும் ஒப்படைத்ததன் பின்னர் உதவி அடிப்படையில் வழங்கப்படுகின்ற வீடுகளின் கடனை முழுமையாக அறவீடு செய்தல் மற்றும் அதன் அடிப்படையில் வீடுகளுக்கான உறுதியை வழங்கும் முன்னுரிமைத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமெனத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது எனினும் அவ்வாறு கடன் மற்றும் மானியத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட வீடுகளுக்காக நலன்பெறுனர்களிடமிருந்து கடனை அறவீடு செய்து பயன்படுத்திய லயின் வீடுகளை மீளப்பொறுப்பேற்காது நுவரெலியா பிரதேசத்தின் 2016 இலிருந்து 2017 வரை கடன் மற்றும் மானியத்தின் அடிப்படையில் வழங்கிய வீடுகளுடன் 17 தோட்டங்களின் கீழ் காணப்பட்ட 12 பிரிவுகளின் 240 வீடுகள் சம்பந்தமான பௌதீக பரிசோதனையின் போது 116 வீடுகளின் நலன்பெறுனர்களுக்கு காணிக்கான உறுதி வழங்குதல் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2009 அலிருந்து 2014 வரை வழங்கப்பட்ட தோட்ட வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் வழிகாட்டிக் கோவையின் 2 ஆம் இலக்க பந்தியின் நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்யும் அளவீட்டு அலகுகளில் காட்டப்பட்டுள்ளவாறு காணப்பட்ட லயின் வீடுகள் அல்லது தற்காலிக குடிசைகள் போன்றவற்றை மீள ஒப்படைக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் புதிய வீடுகளை ஒப்படைத்தல் இடம்பெறுதல் வேண்டும். எனினும் நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்யும் போது உடன்படிக்கைகளில் கையொப்பமிடுதல் போன்ற நடைமுறை பயன்படுத்தப்படாததனால் 2019 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 30 ஆந் திகதி வரையான கணக்காய்வினால் நுவரெலியா மாவட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது வீட்டு நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட 17 தோட்டங்களின் 22 பிரிவுகளில் காணப்பட்ட 491 வீடுகளில் 15 தோட்டங்களின் 20 பிரிவுகள் தொடர்பான லயின் வீடுகள் அகற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அந்த பழைய வீடுகளிலிருந்து அப்புறப்படுத்துதல் இடம்பெறாமையின் காரணமாக அக்காணியை ஏனைய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் இடம்பெறாது அந்நலன்பெறுனர்களின் குடும்பங்களாலேயே தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

(இ) கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் 2015 மார்ச் 31 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோட்ட ஊழியர்களுக்கு காணிகளின் உரிமை மற்றும் பொருத்தமான வீடுகளை வழங்குதலாக அனுப்பி வைக்கப்பட்ட 04 ஆவது பிரேரணையின் மூலம் உரிமையை வழங்குவதற்கு நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்யும் முன்னுரிமை ஒழுங்கு முறைகளுக்கு 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இனங்காணப்பட்ட நலன்பெறுனர்கள் கடன்கொடுப்பனவை பூரணப்படுத்தியிருந்தமை மற்றும் அந்த வீட்டிலேயே தொடர்ந்தும் வசிக்கின்ற மூன்றாந்தரப்பினருக்கு எதுவித சட்டவிரோத மாற்றங்களும் செய்திருக்காத நபர்களாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் போது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் அவ்வாறு வரையறையினை அறிமுகப்படுத்தி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 3.6 கடனை மீள அறவீடு செய்தல்

--------------------------------------------------

(அ) 2015 நம்பர் 11 ஆந் திகதிய அமைப/15/1644/739/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா. 650,000 நிதி ஏற்பாட்டில் ரூபா. 340,000 தொகை 4% கடனாக மற்றும் ரூபா 310,000 தொகையினை மானியமாக வழங்குவதற்கும் அதன் பின்னர் மீண்டும் 2017 பெப்ரவரி 21 ஆந் திகதிய அமைப/17/0306/739/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் ஒரு வீடு ரூபா. 1,000,000 பெறுமதியில் அதாவது ரூபா 480,000 மானியமாகவும் ரூபா. 520,000 கடனாகவும் வழங்குமாறு அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் அமைச்சின் மூலம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டியின் பிரகாரம் ஒரு வீட்டின் பெறுமதியில் ரூபா 494,000 தொகை 4% வட்டி வீதத்தின் கீழ் கடன் அடிப்படையிலானதுடன் மிகுதி ரூபா 506,000 தொகை அமைச்சினால் செலவு செய்வதாகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் வழிகாட்டியில் ஒரு வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், ஊழியர் தோட்ட வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் அவ்வாறு அமைச்சிற்கு கடனை செலுத்துதல் ஆரம்பிப்பது எத்திகதியிலிருந்து என்பது வழிகாட்டியில் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அமைச்சில் கடன் மற்றும் வட்டியை அறவீட செய்வது சம்பந்தமாக முறையான அறிக்கை பேணப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க கடனையும், வட்டியையும் அறவீடு செய்தல் முறையாக அடம் பெற்றிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நுவரெலியா வலயத்தின் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கடன் அடிப்படையில் நலனாளிகளுக்கு 235 வீடுகளை நிர்மாணிப்பதற்காக மேற்கொண்ட செலவின் ஒரு பகுதி கடன் அடிப்படையில் வழங்கியதாக அமைச்சினால் சமர்ப்பித்து நலன்பெறுனர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் செல்லுபடியான சட்டரீதியான உடன்படிக்கை இல்லை என்பது பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. மேலும் கடனை அறவீடு செய்வதற்கு அமைச்சரவைத் தீர்மமானத்தின் பிரகாரம் தேவையான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) செல்லுபடியான உடன்படிக்கை என்பதற்கு இரண்டு தரப்பினர்களும் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அமைச்சிற்காக எவரும் உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்காமை.

(ii) உடன்படிக்கை செய்த திகதி குறிப்பிடப்பட்டிருக்காமை.

(iii) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய காலப்பகுதி, கடன் தவணைப்பணம் முதலிய விபரம் உள்ளடக்கப்பட்டிருக்காமை.

(iv) கடனை செலுத்தத் தவறுகையில் எடுக்கப்படுகின்ற சட்டரீதியான நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்காமை.

(v) வழங்கிய வீட்டில் மேலதிக பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இணக்கம் தெரிவித்து நலன்பெறுனர் கையொப்பமிட்டிருந்த போதிலும் அந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்கிக் கொள்வதற்கு அதில் ஒரு குறிப்பு இருக்கவில்லை.

(இ) ஹற்றன் வலயத்தில் பரீட்சித்த 370 வீட்டு மாதிரிகளுக்கு மத்தியில் 08 வீடுகள் தோட்டத்தில் சேவையாற்றாத நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததனால் இந்த வீடுகளுக்குரிய கடனை அறவீடு செய்கின்ற நடவடிக்கை சிக்கலானது என்பது அவதானிக்கப்பட்டதுடன் நலன்பெறுனர்கள் தோட்டத்தில் சேவையாற்றியிருந்தும் அவர்களிடமிருந்து கடனையும் வட்டியையும் அறவீடு செய்தல் சம்பந்தமாக ஒவ்வொரு நலனாளிகளிடமிருந்தும் இதுவரை அறவிடப்பட்ட அளவு மற்றும் அறவிட வேண்டியது எவ்வளவு என்பது சம்பந்தமாக எதுவித தகவலும் அமைச்சிடம் இல்லாததன் காரணமாக இக்கடனையும் வட்டியையும் அறவீடு செய்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை மற்றும் தேவைப்படுகின்ற நடவடிக்கைகள் இதுவரை அசைச்சின் மூலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை நிதிப்பிரமாணக் கோவையின் 501(இ) மற்றும் 502(ஆ) இன் பிரகாரம் பொது மக்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் பணம், உரிமை கோரலுக்காகச் செய்யப்படுகின்ற பகுதிக் கொடுப்பனவுகள் என்பவற்றை கணக்கீடு செய்தல் மற்றும் பணத்தை செலுத்துவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் பொது நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் முழுப்பணத்தையும் மீள அறவீடு செய்தலினை சான்றுப்படுத்துவதற்காக பெறவேண்டிய பணத்தை தாமதமின்றி சேகரித்தல், உரிய செயற்பாட்டில் திருப்தியான செயல்முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமான மேற்பார்வை தொடர்பாக அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் பதிவுசெய்து வைத்துக்கொள்வதற்கு ஏடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 திசெம்பர் 31 வரையான வீடுகளை நிர்மாணிக்கும் வழிகாட்டியின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிடப்படுகின்ற பணத்தை ஒவ்வொரு மாதத்திலும் முறையாக அறவிட்டு அனுப்பிவைத்தல் தோட்ட அதிகாரிகளினதும் தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தினதும் பொறுப்பாகும் எனவும் அப்பணத்தை மாதாந்தம் பெற்று அடுததுவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கும் வகையில் அமைச்சிற்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்த போதிலும் வீடுகளை வழங்குவதற்காக நேரடியாகச் சம்பந்தப்படுவது மற்றும் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்தல் மேற்கொள்வது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு என்பதனாலும் மேற்கூறிய நிறுவனம் அமைச்சினால் முறையாகத் தெரியப்படுத்தப்பட்டிருக்காததனாலும் அவ்வாறு அறவிடப்பட்ட கடன் பணம் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப்

பொறுப்பினால் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் ஆண்டறிக்கையின் இறுதிக் கணக்கிற்கு இணங்க அவ்வாறு கடனை சேகரித்து அமைச்சிற்கு செலுத்தாதவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,853,120 தொகையும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,747,494 தொகையும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33,251,133 தொகையுமாகும். மேற்கூறிய மீதிகளுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு ரூபா 4,974,314 தொகையான கடனை மீள அறவிட்டுள்ளதாகக் காட்டியிருந்தது. அமைச்சிற்குச் செலுத்தாத பணம் தொடர்பாக எங்களால் 2016 ஆம் ஆண்டிலிருந்து சுட்டிக்காட்டிய போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அமைச்சினால் அறவிடக்கூடியதாக இருந்தது முறையே ரூபா. 7,588,525, ரூபா 7,472,296 மற்றும் ரூபா 7,204,751 தொகைகள் மாத்திரம் என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அமைச்சிற்காகச் சேகரிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 வரை அமைச்சின் வருமானத்திற்கு கிடைத்திருக்காத மீதி ரூபா. 31,020,696 தொகை என்பது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் இறுதிக் கணக்கின் பிரகாரம் காட்டப்பட்டுள்ளது.

### 3.7 அறவிடப்பட்ட கடனை திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்

(அ) 2018 யூலை 18 ஆந் திகதி பணிப்பாளரினால் (அபிவிருத்தி) கணக்காய்விற்கு வழங்கிய நிலுவைப் பணத்தை அறவீடு செய்யும் அறிக்கையின் பிரகாரம் கடனை மீளச்செலுத்துதல் 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு அமைச்சிற்கு ரூபா 13,045,536 தொகை மற்றும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சிற்கு மீளச் செலுத்தாத பணத்திற்காக எதிரீடு செய்யப்பட்ட அவர்களுக்குச் செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் ரூபா 17,106,132 எனவும் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்ட மொத்த மீதி ரூபா 30,151,668 ஆகும். எனினும், அரசாங்கத்தின் வருமானத்திற்கு 2017 ஆம் ஆண்டிற்காக செலவு வைக்கப்பட்டது ரூபா 17,620,011 ஆகும். இவ்வாறு அரசாங்கத்தின் வருமானத்திற்கு 2017 ஆம் ஆண்டில் குறைத்து செலவு வைத்த ரூபா 12,531,657 வித்தியாசத்திற்கான காரணமும் விளக்கமளித்தலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட கடன் பணத்திற்காக 4% வட்டியினை அறவிடுவதாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த வட்டியினை அறவீடு செய்தல் 261/2017 ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க வருமானம் தொடாடபான ஒரு அறிக்கை மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான ஒரு அறிக்கை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல்

---

### (அ) இந்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை

---

10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்ளுமாறு 10/0296/739/002 ஆம் இலக்க 2018 பெப்ரவரி 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை 2020 யூலை 09 ஆந் திகதி வரை அமைச்சிடம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை மேற்பார்வை செய்வதற்காக கொடுப்பனவு செய்தல்

---

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் உள்நாட்டில் நிர்மாணிக்கப்படுகின்ற முதலாவது உத்தேச 4000 வீடுகள் செயற்திட்டத்தின் வீடுகளை நிர்மாணிக்கும் போது அச்செயற்திட்டத்தின் தொடக்க நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக மொத்த பெறுமதியில் 1.5% செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்து பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அந்த 4000 வீடுகளில் 2019/12/31 அந் திகதி வரை முதலாவது கட்டத்தின் 1057 வீடுகளில் 699 வீடகள் நலன்பெறுனர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 315 வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் டன்சீனன் வடக்கு தோட்டத்தின் 43 வீடுகள் செயற்திட்டம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டம் தொடர்பான 2943 வீடுகளில் 2019/12/31 ஆந் திகதி வரை

வீடுகளை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நலன்பெறுநர்களுக்கு ஒப்படைக்கப்படாது உட்கட்டமைப்பு வசதிகளை வழங்காதிருந்த வீடுகளின் எண்ணிக்கை 1053 எனவும் காணியைத் தெரிவு செய்து தயாரிக்கப்படாத வீடுகளின் எண்ணிக்கை 222 எனவும் 2020 மார்ச் 06 ஆந் திகதிய உள்ளக கணக்காய்வு ஐயவினாவின் மூலம் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தக்கூடியதானது பின்வருமாறு ரூபா. 32,263,200 ஆக இருந்த போதிலும் முறையான மேற்பார்வையின்றி ரூபா 34,997,000 செலுத்தியதன் காரணமாக ரூபா 2,733,800 தொகை மிகையாகச் செலுத்தியமை 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் அவதானிக்கப்பட்டது.

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

| **வீட்டு அலகு** | **உத்தேச வீடுகளின் எண்ணிக்கை** | **பூர்த்தி செய்யப்பட்டு நலன பெறுனர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வீடுகள்** | **வீடுகளை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் நலன் பெறுனர்களுக்கு ஒப்படைக்கப்படாத உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாதிருந்த வீடுகள்** | **காணியை தெரிவு செய்யாத அல்லது தயார்படுத்தாத வீடுகளின் எண்ணிக்கை** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| முதலாம் கட்டம் | 1057 | 699 | 315 | 43 | |
| முதலாவது கட்டத்திற்கான வசதிகள் வழங்குவதற்கு மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கு பெருடந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தவேண்டிய பணம் ரூபா | | 1,120,000 x 699 x 1.5% = 11,743,200 | 1,000,000x315x1.5%= 4,725,000 | - | 16,468,200 |
| இரண்டாம் கட்டம் | 2943 | - | 1053 | 222 | |
| இரண்டாம் கட்டத்திற்கான வசதிகள் | | | 1,000,000x1053x1.5%= 15,795,000 | - | 155,795,000 |

| | |
|---|---|
| வழங்குவதற்கு மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கு பெருடந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தவேண்டிய பணம் ரூபா | |
| மொத்தம் ரூபா | 32,263,200 |
| செலுத்தப்பட்டுள்ள பணம் ரூபா | 34,997,000 |
| மிகையாக செலுத்திய பணம் ரூபா | 2,733,800 |

(i) 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய அமைப/19/2239/124/002-i ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 500 வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பான செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதியில் 1.5% இனை செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் மானியத்திலிருந்து பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் வீடுகளின் எண்ணிக்கை தொடர்பான இணக்கப்பாடு காணிகளை ஒதுக்கீடு செய்து திட்டங்களைத் தயாரித்தல் முதலிய அடிப்படை நடவடிக்கைகளையேனும் மேற்கொள்ளாதிருக்கையில் 2019 நவம்பர் 08 ஆந் திகதி ரூபா 10 மில்லியன் தொகையான சிக்கனமற்ற கொடுப்பனவு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2016 சனவரி 18 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இந்திய வீடுகளை நிர்மாணிப்பதனை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளுக்காக வலய பெருந்தோட்டக் கம்பனியின் மூலம் ஒரு வீட்டிற்காக ரூபா 30,000 வீதம் செலவு செய்ய வேண்டுமெனவும் வீடுகளை நிர்மாணித்தன் பின்னர் வீட்டுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு மாத்திரம் அமைச்சின் மூலம் செலவு செய்யப்பட வேண்டிய போதிலும் தோட்டக் காணிகளின் அடிப்படை அளவீட்டு நடவடிக்கைகளுக்காக பரீட்சித்த மாதிரிகளுக்கு இணங்க 3 தோட்டங்களுக்கு ரூபா 355,835 தொகை

அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு மாற்றமாக அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.9 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களை வழங்குதல்

-----------------------------------------------------------------------------------------

(அ) பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு கட்டணத்தை செலுத்துவதன் கீழ் முகாமைத்துவ உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு 2006 நவம்பர் 30 ஆந் திகதிய 06/2238/0/004 ஆம் இலக்கத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த அங்கீகாரத்திற்கு மற்றும் பெறுகை நடைமுறைகளுக்கு மாற்றமாக அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் ஒப்பந்த மேற்பார்வைகளுக்கு மேலதிகமாக ஒப்பந்தர்காரர்களைத் தெரிவு செய்தல், ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்தல் என்பன பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. எனினும் அமைச்சிற்கும் இந்த நிறுவனத்திற்கும் இடையே உரிய செயற்பாடுகளுக்கான ஒரு உடன்படிக்கையேனும் இருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் நிதி ஏற்பாட்டினை வழங்கியதன் பின்னர் அந்த நிதி ஏற்பாட்டின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரத்தின் (BOQ) பிரகாரம் நிர்மாணங்களை மேற்கொள்கின்ற தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சங்கங்களுடன் மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. தோட்ட கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு கிடைக்கின்ற ஒப்பந்தங்களை உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு உப ஒப்பந்தம் வழங்கிய நிறுவனங்களின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்யும் இயலுமை தொடர்பாக பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ICTAD நிறுவனத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒப்பந்தங்கள் போதியளவு இயலுமை இல்லாத ஒப்பந்தக்காரர்களினால் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகவேனும் பதிவு செய்யப்படாத நபர்களினால் நிறைவேற்றப்படுகின்றமை வெளிக்கள பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பானது கூட்டுறவுச் சங்கங்களுடன் உடன்படிக்கை செய்து அமைச்சின் செயற்திட்டத்தை அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படைத்திருந்ததுடன் கூட்டுறவுச் சங்கங்களினால் ஒப்பந்த இயலுமையை பரீட்சிக்காது உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக மாத்திரம் ஒரு ஆண்டிற்கு பத்து மில்லியனுக்கு மேற்பட்ட செயற்திட்டங்கள் பெறுகை நடைமுறைகளை மீறி அதாவது விலைமனுக்களுக்கான அழைப்பு முறைப்படியாக அனுப்பி வைக்காமை, விலைமனு பிணை மற்றும் செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குதல் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பெறுகை வழிகாட்டி மற்றும் பெறுகை அறிவுறுத்தலின் 3.9.4 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தமாக ரூபா 2 மில்லியனை மிகைத்த ஒப்பந்தங்கள் வழங்காதிருக்க வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் ஒரு சங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்ற மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை மூன்றுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து ஒப்பந்த நிர்மாணங்களுக்காக அமைச்சிற்காக தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்களுடன் உடன்படிக்கை செய்து நிர்மாணிக்கப்படுவதன் மூலம் பெறுகை வழிகாட்டிக் கோவையில் காட்டப்பட்டுள்ள எல்லைகளை மிகைத்து நடவடிக்கை எடுத்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், வெளி நிறுவனமான பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு அமைச்சிற்காக ஒப்பந்த நிர்மாணத்திற்கு அக்கூட்டுறவுச் சங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வடவல தோட்ட சங்கத்திற்குச் சொந்தமான ஸ்ட்ரேதடன் தோட்டத்தின் புட்வில் மற்றும் ஸ்ட்ரேதடன் பிரிவுகளின் பழமையான ஒப்பந்த நடைமுறையின் கீழ் 100 வீடுகளுக்காக ரூபா 100,000,000 தொகைக்கு 2016 திசெம்பர் 09 ஆம் திகதி தமது வியாபாரத்தை பதிவு செய்த ஒரு தனியார் கம்பனிக்கு 2016 திசெம்பர் 19 ஆம் திகதி ஸ்ட்ரேதடன் தோட்ட கூட்டுறவுச் சங்கம் இந்த ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. (06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு) எனினும் 2006 சனவரி 25 ஆம் திகதிய NPA/CEO/18 ஆம் இலக்க பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி நாட்டுக்கு உச்ச அளவு விளைதிறன் கிடைக்கும் வகையில் போட்டி விலை ஒப்பீட்டு முறைமைக்கு

இச்செயற்திட்டம் வழங்கப்பட்டது அல்லது தோட்ட சுட்டுறவுச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற எதுவித ஒப்பந்த வழங்கலோ அவ்வாறு பெறுகை நடைமுறையை பின்பற்றியது என்பதற்கு கணக்காய்வில் சான்றுகள் இருக்கவில்லை.

(ஊ) 2018 சனவரி 12 ஆந் திகதி பழைய வீடுகள் சம்பந்தமாக தோட்ட கூட்டுறவுச் சங்கம் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 100 வீடுகள் முன்னர் பூர்த்தி செய்த வீட்டு முறைமைக்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் நிர்மாணிக்கப்பட்ட 50 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததானது ஒன்றித்த முறைமை அதாவது முன்னரே பொருத்துதல் மற்றும் சாதாரண நிர்மாண சேர்மானமாகும்.

## 3.10 கொடியாகல வீடமைப்புச் செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம்

---

(அ) கொடியாகல வீடமைப்புச் செயற்திட்டத்தின் 184 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அமைச்சினால் கேள்வி களை வழங்கும் போது ஒப்பந்தக்காரரின் முன்னைய தகமைகளைப் பரீட்சிக்காதும் நான்காவது ஆகக்குறைந்த விலை மதிப்பீட்டினை எடுத்துக்கொள்ளாது வெளிப்படைத்தன்மையின்றி ஐந்தாவது ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும் 2016 மே 23 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் ஆரம்ப மற்றும் இறுதித் திகதிகள், தாமதக் கட்டணம் என்பன சம்பந்தப்பட்ட எந்த நிபந்தனையும் உடன்படிக்கையின் பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொடியாகல தோட்ட பிரதிப் பொது முகாமையாளரினால் 184 வீடுகளில் 42 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன எனவும் மிகுதி வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2017 யூன் மாதத்தின் பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக செய்யப்பட்ட வேலைகளுக்கு இணங்க 42 வீடுகளுக்கு செலுத்தக் கூடியதாகவிருந்த உச்ச அளவு பணம் ரூபா 26,830,910 ஆகும். எனினும் 2018 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டுள்ள பணம் ரூபா 40,443,527 ஆகும். அதற்கிணங்க ரூபா 13,612,617 பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் மேறபார்வையின்றி மீண்டும்

முற்பணங்களை வழங்குதல், செயலாற்றல் பிணையின் செல்லுபடியாகும் திகதி காலாவதியாகவதற்கு முன்னர் அதன் திகதியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த மிகையாகச் செலுத்துதல் அரசாங்கத்திற்கு ஒரு நட்டமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டதுடன் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) மேலே கூறப்பட்ட 42 வீடுகளின் குறைபாடுகள் காரணமாக வீட்டு நலனாளிகள் பொறுப்பேற்காதிருந்தமையின் காரணமாக நலனாளிகளால் கூட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரிசெய்வதற்கு 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி ஏனைய நிறுவனங்களுடன் 2018 நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் வேலையைப் பூர்த்திசெய்வதற்கு வெளிப்படைத் தன்மை மற்றும் பெறுகை நடைமுறைகளின்றி ரூபா 7 மில்லியன் தொகைக்கு இணங்கி 2019 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 1,277,145 தொகை அந்த கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க இச்செயற்திட்டத்திற்காக ரூபா 41,720,672 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 14,889,762 செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு நிதி ஏற்பாட்டினை மிகைத்த கொடுப்பனவிற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் இதுவைர பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் அங்கீகரித்த நிதி ஏற்பாட்டினை மிகைத்து இடம்பெறுகின்ற இச் செலவு செய்தலும் மேற்கூறிய பணத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கான ஒரு நட்டமாக இருந்தது.

## 3.11 ஒப்பந்தக்காரர்களக்கு பணம் செலுத்துதல்

---

(அ) 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வு அவதானிப்புக்களின் மூலம் கணக்குகள் பிரிவு நேரடியாக அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு காசோலைகளை வழங்கியிருந்தது எனவும் அதற்கு இணங்க அபிவிருத்திப் பிரிவின் மூலம் காசோலையைப் பெற்றுக்கொண்டு மீண்டும் தபாலில் அனுப்புதல் அல்லது கைகளால் ஒப்படைத்தல் இடம்பெற்றிருக்குமாகவிருந்தால் அவ்வாறு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்படுகின்ற அனைத்து காசோலைகளுக்குமாக காசோலை எழுதிய திகதி, காசோலை இலக்கம், அவற்றிற்கு பணம் செலுத்திய வங்கி, அதனைப் பெற்றுக்கொண்ட நபர், பெறுமதி, வவுச்சர் இலக்கம், காசோலை அனுப்பிய திகதி, அப்பணம் பெற்றுக்கொண்டமையை தெரியப்படுத்திய திகதி, அனுப்பி வைத்தல்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் சுருக்க கையொப்பம் என்பவற்றை

உள்ளடக்கிய பதிவேடு நிதிப்பிரமாணம் இலக்கம் 388 இன் பிரகாரம் பேணப்பட வேண்டிய போதிலும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்ட காசோலைகளுக்காக மேற்கூறியவாறு ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் இடைக்கால விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்தும் போதும் விடயத்திற்குப் பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் உரிய ஒப்பந்தக்காரருடன் ஒன்றித்த கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தமையும் அந்த ஒன்றித்த கணக்குகளுடன் விலைப்பட்டியல்களைப் பரீட்சித்துப் பார்த்து இடைக்காலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் இடம் பெறவேண்டிய போதிலும் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை.

(இ) ஸ்ட்ரதடன் தோட்டத்தில் 100 வீடுகள் முன்னரே பூர்த்தி செய்தல் ஒப்பந்த முறைமையின் கீழ் நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 19 ஆந் திகதி 06 மாதங்களில் பூர்த்தி செய்து வழங்குவதன் கீழ் உடன்படிக்கை செய்து கொடுப்பனவு செய்வதற்காக அமைப/17/0306/739/002 ஆம் இலக்க 2017 மார்ச் 1 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உச்ச அளவில் ஒரு வீட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் ரூபா 1,000,000 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு மாற்றமாக அந்த வீட்டின் நிதி ஏற்பாட்டினை பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் வேண்டுதல் மற்றும் செயற்திட்டப் பொறியியலாளரின் சான்றிதழின் அடிப்படையில் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 1,030,000 வரை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய 100 வீடுகளில் 50 வீடுகள் 2019 சனவரி 07 ஆந் திகதி பூர்த்தி செய்து ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2019 திசெம்பர் 31 அந் திகதி வரை பொறியியலாளரின் அங்கீகாரத்திற்கு இணங்க செலுத்தப்பட்டுள்ள பெறுமதி ரூபா 47,065,717 தொகையும் அது தொடர்பான நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 2,214,815 தொகையுமாகும். எனினும் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) உப ஒப்பந்தக்காரரினால் மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மெற்கொண்ட நிர்மாணங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்காக அமைச்சினால் கொடுப்பனவு செய்யும் போது காசோலைகள் அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு எழுதவதற்கு பதிலாக மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் எழுதியதன் காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு பணம்

கிடைப்பதற்கு அதிக தாமதம் ஏற்பட்டிருந்தது. 2018 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2019 மே 30ஆந் திகதி வரையான காலத்தினுள் ஹற்றன் மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் தெரிவுப் பரிசோதனைக்கு இணங்க அமைச்சு ஒப்பந்தக்காரர்களுக்காக விடுவித்த ரூபா 204.62 மில்லியன் தொகையில் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 105.03 மில்லியன் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒப்பந்தக்காரர்களின் சாத்தியவளம் பலவீனமடைந்ததன் காரணமாக நிர்மாண வேலை தாமதமடைந்தமை, முறையான நியம தரத்தில் செய்யப்படாமை என்பவற்றைப் போல விடுவிக்கப்படுகின்ற அரசாங்கத்தின் பணம் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

## 3.12 முகாமைத்துவக் கட்டணங்களைச் செலுத்துதல்

--------------------------------------------------------------------------------

வீடமைப்புச் செயற்திட்டம் தொடக்கத்திலிருந்து வீடுகளை நிர்மாணித்தல் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் அமுல்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றது. இதற்காக 6% ஆன முகாமைத்துவக் கட்டணம் செலுத்தப்படுகின்றது. மேலும் நலன்பெறுனரின் தலையீட்டின் அடிப்படையிலான வீடுகளுக்காக பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு 3%, தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கு 1%, தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு 1%, அமைச்சின் தொழில்நுட்ப உதவிக்காக 1% என்பனவாக மொத்தமாக 6% முகாமைத்துவ கட்டணமாக விடுவிக்கப்படுவதாக வீடுகளை நிர்மாணிக்கும் வழிகாட்டியின் 10 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் மாத்திரம் 6% முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 45,781,306 தொகையும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 53,650,870 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் முகாமைத்துவக் கட்டணத்தைச் செலுத்துவதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் இல்லாதிருந்ததுடன் செயற்திட்ட மேற்பார்வைக்கு முகாமைத்துவக் கட்டணம் செலுத்துவதற்கு பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு அல்லது தோட்ட கூட்டுறவுச் சங்கத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.13 வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பான அவதானிப்புக்கள்

--------------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நுவரெலியா மாவட்டத்தில் மேற்கொண்ட வீடுகளை நிர்மாணித்தல் சம்பந்தமாக 2017 திசெம்பர் மாதத்தில் மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம்

ஆண்டு வரை மேற்கொண்ட நிர்மாணங்கள் சம்பந்தமாக 2019 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 30 ஆந் திகதி வரை நுவரெலியா வலயத்தில் அமைந்துள்ள 43 தோட்டங்களின் கீழ் காணப்பட்ட 49 பிரிவுகளின் 1105 வீடுகளில் மாதிரியாக 18 தோட்டங்களின் கீழ் காணப்பட்ட 26 பிரிவுகளின் 616 வீடுகளாகிய 56 சதவீதமும் ஹற்றல் வலயத்தில் அமைந்துள்ள 10 தோட்டக் கம்பனிகளின் கீழ் காணப்பட்ட 70 பிரிவுகளின் 1668 வீடுகளிலிருந்து மாதிரியாக 8 தோட்டகம்பனிகளின் கீழ் காணப்பட்ட 15 பிரிவுகளின் 370 வீடுகளாகிய 22.3 சதவீதமும் ஆகும் வகையில் கணக்காய்வு வெளிக்களப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

காணியின் புவி முரண்பாடுகளுக்கு இணங்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட NBRO அறிக்கைகளுக்கு இணங்கவும் திட்டத்துக்கு இணங்கவும் நிலத்தின் அளவு மற்றும் அதன் நிலைமையை கவனத்தில் கொண்டு பொருத்தமான வகையில் வீட்டுத் திட்டத்தை காணியில் அமைப்பதற்கு அல்லது பாதுகாப்பு முயற்சிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு பாதிப்பு ஏற்படும் ஆபத்துக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக வீட்டை குறுகிய காலத்தில் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்படுவதன் காரணமாக நிர்மாணிப்பதற்கு மேற்கொண்ட செலவு விளைதிறனை மட்டுப்படுத்துவதனால் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு இயலாமை ஆபத்தும் அவதானிக்கப்பட்டது. உதாரணம் கீழே தரப்படுகின்றன.

- 2006 ஆம் ஆண்டின் போது குடியிருப்பதற்கு திறக்கப்பட்டிருந்த டொரின்டன் ஸ்டெயா - இலக்கம் 05 வீடின் மலசல கூடத்தை நிர்மாணித்தலானது ஒரே சரிவாகிய 12 அடி அளவான இடத்திற்கு 2 ½ அடி அளவான தூரத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக மலசல கூடத்தின் அத்திவாரம் வெடித்தல் மற்றும் கீழ் இறங்குதல் இடம்பெற்றிருந்தது. அதன் காரணமாக மலசல கூடத்தின் அத்திவாரம் வெடித்தல் மற்றும் கீழ் இறங்குதல் ஆரம்பித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மலசல கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள திசைக்கு இடது திசையில் அதற்குப் பொருத்தமான மற்றும் போதியளவான இடவசதி இருந்த போதிலும் அது தொடர்பாக வீட்டின் திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அணையை அமைப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.



- 2016 ஆம் ஆண்டின் போது குடியிருப்பதற்குத் திறக்கப்பட்டிருந்த ஹுட்வில் - பென்கடன் டவுன் சிப் - 17 ஆம் இலக்க வீட்டின் தெற்குப் பக்கச் சுவர், ஒரேயடியாக கீழிறங்குகின்ற 10 அடி அளவான சரிவிற்கு 2 அடி அளவான தூரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் சுவரின் 2 இடத்தில் 5 அடி அளவான குழிகள் அவதானிக்கப்பட்டதுடன் சுவர் கீழ் இறங்குதல் ஆரம்பித்து வீட்டில் குடியிருத்தல் ஆபத்தானது என்பது அவதானிக்கப்பட்டது. இந்த வீட்டை நிர்மாணிப்பதற்காக இடது பக்கமாக 6 அடிக்கு இன்னும் இடவசதிகள் காணப்பட்டிருந்தும் அதற்கு கவனம் செலுத்தி வீட்டை இன்னும் இடது பக்கத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும் ஓரேயடியான சரிவிற்காக பக்கச்சுவர் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.





- 2016 ஆம் ஆண்டின் போது குடியிருப்பதற்கு திறந்து விடப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது குடியிருப்பதற்கு வருகை தந்திருக்காத ஹுட்வில் -பென்கடன் டவுன்சிப் -57 ஆம் இலக்க வீட்டின் சமையலறையின் அடுப்பும் புகைக்கூடும் ஒரேயடியான சரிவாகிய 12 அடி சாய்விற்கு 3 அடி தூரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் புகைக்கூட்டின் சுவருக்கு மேலே 12 அடி அளவான தடுப்பினை ஏற்படுத்தி சமையலறையை தொடர்புபடுத்துகின்ற சுவர் விலகியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், இதன் போது சமையலறையின் அடுப்பையும் புகைக்கூட்டினையும் சமையலறையின் பின்பக்கத்திற்கு (தற்பொழுது காணப்படுகின்ற இடத்திலிருந்து தெற்கு பக்கத்திற்கு) கொண்டுவரும் வாய்ப்புக் காணப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது மற்றும் வீடுகளானது புவி இணக்கப்பாட்டிற்கு இணங்க அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன் சாய்வான இடத்துக்கு அணைச் சுவரேனும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பாதுகாப்பின்றி இருந்தது.




- ரதெல்ல (மேல்) பகுதி தொடர்பாக 2017 மார்ச் 17 ஆந் திகதி வழங்கப்பட்ட NBRO/31/NE/NED/SPI/6124 ஆம் இலக்கத்தின் மூலம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய அறிக்கையின் பிரகாரம் மண் அரிப்பினைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் தீவிர மழை நீர் முகாமைத்துவம் காணியில் ஏற்படுத்துவதும் அத்தியாவசியமானதாகக் காட்டப்பட்டிருந்ததுடன் மழை நீர் நிலத்துக்குள் உறிஞ்சப்படாத வகையில் வடிகாண்களின் மூலம் வெளியே அனுப்ப வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்த

போதிலும் வடிகாண் முறைமையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சென்கும்பஸ் கீழ் பகுதியின் 25 வீடுகள் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 03 வீடுகள் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன எனவும் அவற்றில் 02 வீடுகளுக்கு நுழைவு வீதிகளைத் தயார்ப்படுத்தும் சிக்கல் தன்மை காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது.



- பரீட்சிக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பான சின் (பூண்டுலு ஓயா) தோட்ட வீடுகள் செயற்திட்டம் 2019 ஆகஸ்ட் 10 ஆந் திகதி பொது மக்களின் உரிமைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் வடிகாண் முறைமையும் தயாரித்து பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும் Manhole இனை மூடுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.



## 3.14 நியமதரமற்ற மூலப்பொருட்களை ஈடுபடுத்துதல்

---

(அ) அரசாங்க கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக SLS தரச் சான்றிதழுடனான கட்டிடப் பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அது பற்றி அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் இதன் போது தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரத்தில் ஈடுபடுத்த வேண்டிய மூலப்பொருட்களில் எதுவித நியம தரமும் குறிப்பிடப்பட்டிருக்காமையினால் வழங்கப்பட்டுள்ள விலைகள் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட விலை விகிதங்களை விட 24% ஆல் குறைவடைந்ததனால் நியம தரமற்ற மூலப்பொருட்கள் நிர்மாணித்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதாவது நியம தரமற்ற கதவுப் பூட்டுக்கள், டயில், மின்சார உபகரணங்கள், PVC நீர்க்குழாய்கள் என்பன அவதானிக்கப்பட்டன. 2017 திசெம்பர் மாதத்தின் பௌதீக பரிசோதனையின் போது நுவரெலியா மாவட்டத்தில் பரீட்சிக்கப்பட்ட பொலக்கல் மற்றும் கம்பி மாதிரிகள் நியம தரமற்றது என்பதற்கு பொருள் ஆய்வுகூட உறுதிப்படுத்தல் கிடைத்திருந்தது. அதற்கிணங்க இந்நிர்மாணத்திற்காக நியம தரமற்ற மூலப்பொருட்கள் ஈடுபடுத்தப்பட்டது என்பது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.



(ஆ) அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் இலங்கையின் எந்த ஒரு இடத்திலும் அத்திவாரத்தின் உயரம் 11½ அடியாக அளவீட்டுப் பத்திரம் தயாரிக்கப்படுகின்றது. எனினும் நுவரெலியா போன்ற மலைப் பிரதேசங்களில் இந்த உயரம் எப்படியும் போதியதல்லாத சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு அத்திவாரம் வலுவற்றிருப்பதன் காரணமாக சாய்வுடனான பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட பல வீடுகள் சிறிது கீழ் இறங்கி இருப்பதற்கு உடன்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அத்திவாரத்திற்காக 6’’x9’’

கற்கள் ஈடுபடுத்த வேண்டிய போதிலும் பாரிய அளவிலான கருங்கற்கள் ஈடுபடுத்திய சந்தர்ப்பங்களும் அத்திவாரத்திற்காக கற்கள் ஈடுபடுத்தி பதாம் ஈடுபடுத்தாத (Rubble Packing) சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டதுடன் இதற்கிணங்க நிர்மாணங்கள் நியம தரமற்றவை என்பது அவததானிக்கப்பட்டது.





(இ) அத்திவாரத்தின் அகலம் 1½ ஆக இருக்க வேண்டியதுடன் உயரம் 1½ ஆக இருக்க வேண்டிய போதிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடமைப்புச் செயற்திட்டங்களின் அத்திவாரத்தின் அகலம் 1'ஆக கல் நிரப்பிய சந்தர்ப்பமும் உயரம் 1' ஆன சந்தர்ப்பமும், (உதாரணம் மவுஸ்ஸாகலே வீடமைப்புச் செயற்திட்டம், கவரவில வீடமைப்பு செயற்திட்டம்) ஈடுபடுத்தப்பட்ட கொங்கிறீட் தூணுக்கு ஸ்டிரப் கட்டும் போது இரண்டு ஸ்டிரப்களுக்குமிடையிலான இடைவெளி 8'' ஆக இருக்க வேண்டிய போதிலும் அது 12''-14'' ஆக ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பமும் (உதாரணமாக:- மவுஸ்ஸாகலே வீடமைப்புச் செயற்திட்டம், வென்சர் தோட்டத்தின் 10 வீடுகள்) காணப்பட்டதுடன் அதற்கிணங்க நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கண்காணிப்பு முறைப்படியாக இடம் பெற்றிருக்கவில்லை என்பது பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.




(ஈ) பதாமை தயாரிப்பதற்காக மணலுக்குப் பதிலா கல் தூள்கள் கலக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் ஈடுபடுத்த வேண்டிய மஹியங்கனை மணலுக்குப் பதிலாக களி கலந்த மணல் ஈடுபடுத்தி வீடுகள் பூசப்பட்டிருந்த சந்தர்ப்பம் பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டன.



(உ) ஈடுபடுத்திய விலை விகிதம் மிகவும் குறைவாக இருந்ததனால் நியம தரமற்ற மரங்கள் கதவு யன்னல்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை வளைந்த கறையான் துளைத்த மரங்களாக இருந்ததுடன் இடைவெளிகள் காணப்பட்ட பல சந்தர்ப்பங்கள் பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டன.



(ஊ) மேசன்மார்களுக்கு போதியளவு சம்பளம் செலுத்தும் இயலுமை இல்லாததன் காரணமாக எதுவித அனுபவமும் இல்லாத மேசன்மார்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக செங்குத்து இல்லாத, சுவர் முறையாக சடலிம் ஈடுபடுத்தாததன் காரணமாக லிண்டல் சுவர்களுக்கு வெளியெ காணப்பட்ட சந்தர்ப்பம், புகைக்கூட்டிலிருந்து நீர் அதிகளவில் கசிந்து செல்கின்ற சந்தர்ப்பம், பூச்சுக்கள் 16 mm அளவில் ஈடுபடுத்தாத பல சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.





(எ) நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட்களின் வலிமை தொடர்பாக எதுவித சந்தர்ப்பத்திலும் ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் ஈடுபடுத்திய கொங்கிறீட் முறையாக கலக்கப்படாத சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டன. உதாரணமாக கீழ்ப்பகுதியின் 25 வீடுகள் செயற்திட்டம், ஹென்போல்ட் (க்ளென் ஈகல்ஸ்) பகுதியின் 25 வீடுகள் செயற்திட்டம்.




(ஏ) வீடமைப்புச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது வீடுகளை நிர்மாணித்து பூர்த்தி செய்து வடிகாண் முறைமையை நிர்மாணித்தல், அணைகளை ஈடுபடுத்துதல், நீர், மின்சார முறைமைகளை தயார்படுத்துதல் முதலியவற்றை நிறைவேற்றுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் நிர்மாணங்களில் நீர் மூழ்கியிருந்த சந்தர்ப்பங்களும், அதிகளவு நீரினால் அடித்துச் செல்லப்பட்டு பாதிப்பிற்கு உள்ளாகி ஆபத்தான நிலைமை உருவாகியிருந்த சந்தர்ப்பங்களும் அணைகள் உடைப்பெடுத்திருந்த சந்தர்ப்பங்களும், நீர் மற்றும் மின்சாரம் இல்லாது குடியிருப்பதற்கு வருகை தராத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டதனால் வீடுகளை நிர்மாணிப்பதற்கு இணைவாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.




(ஐ) வீடுகளை நிர்மாணித்தலானது போதியளவு நிதி மற்றும் பௌதீக வளங்கள் இல்லாத நபர்களுக்கு அல்லது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கியமையின் காரணமாக பல செயற்திட்டங்கள் பல மாதங்களாக இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறான செயற்திட்டங்களின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டதனால் தூண்களுக்கு கம்பி ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பல மாதங்களாக அக்கம்பி மழை நீரில் நனைவதனால் துருப்பிடித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

உதாரணம்:- லெதன்ட் 15 வீடுகள் செயற்திட்டம்,
தலவாக்கெல்லை 20 வீடுகள் செயற்திட்டம்

(ஒ) பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளுக்குரிய சின் (பூண்டுலு ஓயா) தோட்ட வீடமைப்புச் செயற்திட்டத்தின் 15 அம் இலக்க வீடு தொடாடபாக மேற்கொண்ட பரிசோதனையின் போது தரை வெடித்ததன் காரணமாக மீண்டும் தரையை தயார்ப்படுத்த வேண்டியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் தரையைப் பூசுவதற்கு கல் தூள்கள் உடனான பதாம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது எனவும் தரை வெடித்திருந்தது எனவும் டெஸ்போல்ட் (கீழ்) 8 ஆம் இலக்க வீட்டின் 100 அடி அளவான பரப்பு வெளிக்கிளம்பி இருந்தது எனவும் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(ஓ) க்லோபல் கொமியூனிடி டிவலொப்மன்ட (தனியார்) கம்பனியினால் ஸ்ட்ரதடன் தோட்டத்தின் யுட்வீல் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட முன்னரே பூர்த்தி செய்யப்பட்ட 50 வீடுகளின் நியம தரம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளது சுவரின் உயரத்தின் அளவு உடன்படிக்கைக்கு இணங்க சமர்ப்பக்கப்பட்ட திட்டம் மற்றும் அளவீட்டுப் பத்திரத்தின் (BOQ) பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வினால் மேற்கொண்ட பௌதீக அளவீட்டு ஒப்பீட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| வீட்டு இலக்கம் | வீட்டின் பிரதான கதவுடன் முன்பக்க சுவரின் உயரம் (mm) | வீட்டின் பிரதான கதவுக்கு அருகாமையிலுள்ள பக்க சுவரின் உயரம் (mm) | திட்டத்தின் பரகாரம் இருக்க வேண்டியது | |
|---|---|---|---|---|
| | | | முன்பக்க சுவரின் உயரம் (mm) | முன்னால் உள்ள பக்க சுவரின் உயரம் (mm) |
| 19 | 2610 | 3100 | 2850 | 3410 |
| 21 | 2470 | 3320 | | |
| 23 | 2540 | 3360 | | |
| 25 | 2550 | 3390 | | |

(ii) முன்னரே பூர்த்தி செய்யப்பட்ட யன்னலை அத்திவாரத்துடன் தொடர்புபடுத்தும் போது அந்த யன்னல் இரும்புக் கம்பியை பயன்படுத்தி பொருத்தப்பட்டிருந்த போதிலும் திருகாணி பயன்படுத்தி பொருத்தப்படாததனால் அதன் நிலைத்திருத்தல் பாதகாப்பற்றதாக இருக்கலாம் என்பதுவும் நிர்மாணிக்கப்பட்ட வீட்டின் முன்னால் உள்ள யன்னல்களைப் பொருந்தும் போது திட்டத்தின் பிரகாரம் ஒரே மாதிரியாக முறைப்படியாக பொருத்தப்பட்டிருக்காததனால் வீடு ஒழுங்கற்றதாக மற்றும் முறையான மேற்பார்வையின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஔ) ஸ்ட்ரதடன் தோட்டத்தின் ஸ்ட்ரதடன் பகுதியில் முன்னரே பூர்த்திசெய்யப்பட்ட 50 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் சம்பந்தமாக 2016 திசெம்பர் 21 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் தோட்டத்தில் 50 வீடுகளுக்கு மத்தியில் 13 வீடுகளுக்காக மாத்திரம் அத்திவாரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அங்கீகரித்த திட்டத்திற்கு இணங்கியிருக்காத மற்றும் நியம தரத்தை மீறிய 2 முன்னரே பொருத்தப்பட்ட வீடுகள் நிலப்பிரதேசத்தில் இருந்தன என்பது 2019 நவம்பர் 27 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

- திட்டத்தில் Plainth Beam இற்குள் மலசலகூடத்தின் அத்திவாரம் உள்ளடங்கியிருக்க வேண்டிய போதிலும் பௌதீக பரிசோதனைத் திகதியில் அது வரை பூர்த்தி செய்யப்பட்ட 13 அத்திவாரங்களில் மலசலகூடத்திற்காக அத்திவாரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- அத்திவாரத்திற்காக ஈடுபடுத்திய கம்பி 7 அங்குலத்திற்கு 7 அங்குல ஸ்டிரப் கட்ட வேண்டிய போதிலும் 12 அங்குலத்திற்கு 12 அங்குல ஸ்டிரப் கட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வீட்டின் தரை (Floor Area) திட்டத்தின் பிரகாரம் 26’-10’’ x 21-2’’ ஆக இருக்க வேண்டிய போதிலும் அளவீடு செய்யப்பட்ட 2 மாதிரி அத்திவாரங்களை பரீட்சித்த போது 25’-9’’ x 21’-2’’ மற்றும் 25’2’’x20’-11’’ ஆக இருந்தது எனவும் திட்டத்தின் பிரகாரம் அத்திவாரமானது Plinth Beam இலிருந்து 4 அங்குலம் போடப்பட வேண்டிய போதிலும் 3 அங்குலத்தில் போடப்பட்டிருந்தது எனவும் அது திட்டத்திற்கு இணக்கமற்றது எனவும் அவதானிக்கப்பட்டது.

- முன்னரே பொருத்தப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்காக எடுத்துவரப்பட்டு நிலத்தில் வைக்கப்பட்டிருந்த பொருத்தப்படாத முன்னரே பூர்த்தி செய்யப்பட்ட யன்னல்கள் வெடித்து மிகவும் தரம் குறைந்த நிலையில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.15 செயற்திட்டத்தின் செயலாற்றல்

---------------------------------------------------

### 3.15.1 செயற்திடடத்தின் செயல்முன்னேற்றம்

---------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை, கணக்காய்விற்கு தோட்ட ரீதியாக சமர்ப்பிக்கப்பட்ட விபரமான செயல்முன்னேற்ற அறிக்கை என்பவற்றிற்கு இடையே பின்வருமாறு காணப்பட்ட பொருத்தமின்மைகளின் காரணமாக அந்த அறிக்கைகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(அ) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடடிக்கைத் திட்டத்தில் பசுமையான தங்க வீட்டுத்திட்டத்தில் இரண்டு கட்டங்களின் கீழ் 1500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கையில் அந்த உத்தேச வீடுகளின் அளவு 1566 ஆகவும் செயல்முன்னேற்ற அறிக்கையில் வீடுகளின் அளவு 1136 ஆகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் தொடர்ச்சியாக செய்யப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 2543 ஆக இருந்தும் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு தொடர்ச்சியாக செய்யப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 2567 ஆகும். எனினும், 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப திகதியில் தொடர்ச்சியாக செய்யப்பட்டுக் காணப்பட்ட 3325 வீடுகளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு தொடர்ச்சியாக செய்யப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 3,345 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1458 ஆக இருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்த வீடுகளின் எண்ணிக்கை 936 ஆகும்.

(ஈ) செயல்முன்னேற்ற அறிக்கையில் பசுமையான தங்க விடுகள் முதலாவது கட்டத்தில் முழு வீடுகளின் எண்ணிக்கை 571 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அதன் உள்ளபடியான மொத்தம் 323 ஆகும்.

### 3.15.2 நிர்மாணங்களைக் கைவிடுதல்

(அ) புஸல்லாவை நுவரெலியா பிரதான வீதியிலிருந்து 17km அளவான தூரத்தில் அமைந்துள்ள வேவென்டேட் வீடமைப்புத் திட்டத்தின் போடோப் தோட்டத்தில் 2017 ஆம் ஆண்டில் 50 வீடுகள் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 நவம்பர் 27 ஆந் திகதி வரை எந்த வீட்டினதும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் சில வீடுகள் பல்வேறு கட்டடத்தில் காணப்படுகின்றமையும் சில வீடுகள் காடுகளால் மூடப்பட்டிருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டது. இதில் 30 வீடுகளில் சுவர் கட்டப்படாது கூரைத் தகடு மாத்திரம் பொருத்தப்பட்டிருந்ததுடன் அதில் 17 வீடுகளின் சுவரைக் கட்டுவதற்கு

ஆரம்பித்து நிலத்திற்கு கொங்கிறீட் இடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதில் தொடக்க ஒப்பந்தத்தை கைவிட்டதன் பின்னர் இன்னும் பல சந்தர்ப்பங்களில் 07 ஒப்பந்தக்காரர்கள் இச்செயற்திட்டத்தை பொறுப்பேற்று நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்யாது பல்வேறு கட்டங்களில் கைவிட்டுச் சென்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொகவந்தலாவை தோட்ட சங்கத்திற்குச் சொந்தமான ஒஸ்போன் தோட்டத்தின் காஸ்ல்ரீப் பிரிவின் 30 வீடுகள் செயற்திட்டமானது இன்னல்களுக்கு உட்பட்ட நபர்களுக்காக 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 நவம்பர் 27 ஆந் திகதி வரை எந்த வீடும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 30 வீடுகளில் கூரை மட்டம் வரை 15 வீடுகளும் தூண் மட்டம் வரை 15 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2019 யூன் 25 ஆந் திகதி உள்ளகக் கணன்னாய்வுப் பிரிவின் கணக்காய்வு ஐய வினாவின் பிரகாரம் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட எனினும் ஐய வினாத் திகதியான 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத ஹற்றன் வலயத்தின் 298 வீடுகளும் நுவரெலியா வலயத்தின் 156 வீடுகளும் அவதானிக்கப்பட்டன.

### 3.15.3 நலன் பெறுனர்களால் வீடுகளைப் பயன்படுத்தல்

---

(அ) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இறுதிக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு ஐய வினாத் திகதியான 2019 யூன் 25 ஆந் திகதி வரை அந்த வீடுகள் நலன்பெறுனர்களுக்கு ஒப்படைக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக அந்த வீடுகளை திருத்தம் செய்வதற்கு அமைச்சினால் செலவு செய்ய வேண்டியிருந்ததனைப் போல இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத்திற்கு பெறுபேறுகள் இல்லாததனால் செய்திட்டத்தின் குறிக்கோள்கள் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையில் காணப்பட்ட சிக்கல்களின் காரணமாக நுவரெலியா பிரதேசத்தில் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளில் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் ரூபா 2,300,000 பெறுமதியான 03 வீடுகள் வழங்கப்பட்ட நலன்பெறுனர்களால் அவை பயன்படுத்தப்படாது ஏனைய நபர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன எனவும் அதற்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட நலன்பெறுனர்களுக்கு இவ்வீடுகள் அவசியமற்றவை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(இ) வீடுகள் வழங்கப்பட்டதன் பின்னர் அமைச்சு உத்தியோகத்தர்களின் மூலம் இச் செயற்திட்டம் மேற்பார்வை செய்யாப்படாமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கவில்லை என்பது 2019 திசெம்பர் 30 ஆந் திகதி வரை அந்த வீடுகள் பயன்படத்தப்படாது காணப்பட்டமையும் அமைச்சினால் அத பற்றி மேற்பார்வை செய்து நடவடிக்கை எடுக்காமையும் காரணமாக அரசாங்கத்தின் பணம் வீணாகியிருந்தது எனவும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

- ஹற்றன் பிரதேசத்தில் நிர்மாணக்கப்பட்டு நலன் பெறுனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகள் சம்பந்தமாக 2019 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 30 ஆந் திகதி வரை மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனையின் போது நலன்பெறுனர்களுக்கு 235 வீடுகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 140,359,085 பெறுமதியான 153 வீடுகள் அதாவது 65 சதவீதம் ஒரு மாதத்திற்கும் 15 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் நலன் பெறுனர்கள் குடியிருப்பதற்கு வருகை தரவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

- நுவரெலியா பிரதெசத்தில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்டு நலன்பெறுனர்களுக்கு 491 வீடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 26 சதவீதம் அதாவது ரூபா 108,750,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 128 வீடுகள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் 03 ஆண்டுகள் 03 மாதங்கள் வரையான காலம் நலன்பெறுனர்கள் குடியிருப்பதற்கு வருகை தராதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

- நுவரெலியா பிரதேசத்தில் பரீட்சிக்கப்பட்ட 616 வீடுகளில் சில வீடுகளில் குடியிருக்காமையினால் அவற்றின் கதவுகளின் பூட்டுக்கள் கழற்றி அகற்றப்பட்டிருந்த சந்தர்ப்பம் காணப்பட்டிருந்தது. உதாரணமாக நிவ்போட்மோர்(New Portmor) வீடமைப்புச் செயற் திட்டத்தின் வீடுகள் திறக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ஹென்போல்ட் - கிளநெக்கிள்ஸ் (Glenegals) தோட்டத்தின் பசுமையான தங்க வீடுகள் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்படுகின்ற தோட்ட வீடுகள் செயற்திட்டம் 2019 செப்தெம்பர் 15 ஆந் திகதி மக்களின் உரிமைக்கு கையளிக்கப்பட்டிருந்தும் 13 ஆம் இலக்க வீடு தொடர்பாக மலசலகூட குழி மாத்திரம் வெட்டப்பட்டிருந்த போதிலும் அது பாதுகாப்பாக மூடப்படாது காணப்பட்டது. அவ்வாறே மலசலகூடத்தின் சுவர் கட்டப்பட்டிருந்த போதிலும் உரிய பொருத்துதல்கள் செய்யபடாதிருந்ததுடன் கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்ட 2019 நவம்பர் 28 ஆந் திகதி வரை நலன்பெறுனர்கள் குடியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.15.4 இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பயன்படுத்துதல்

---

உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டவாறு மேற்கொண்ட பௌதீக பரிசோதனைக்கு இணங்க முதலாம் கட்டம் தொடர்பான இந்த 4000 வீடுகள் இரண்டு கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் முதலாவது கட்டத்திற்கு 1057 வீடுகளும் இரண்டாவது கட்டத்திற்கு 2943 வீடுகளுமாகும். அதில் முதலாவது கட்டத்திற்குரிய 1057 வீடுகள் பூரணப்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த முடிவுறுத்தப்பட்ட வீடுகளை நலன்பெறுனர்களுக்கு ஒப்படைத்தல் மற்றும் குடியிருத்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பது பின்வரும் அட்டவணையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| **தோட்டத்தின் பெயர்** | **பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை** | **நலன் பெறுனர்களுக்கு வழங்கிய திகதி** | **பௌதீகப் பரீசோதனை** | |
|---|---|---|---|---|
| | | | **செய்யப்பட்ட திகதி** | **அத்திகதியில் குடியிருந்த எண்ணிக்கை** |
| பொகவான பெகெவந்தலாவ | 153 | 2019/02/24 | 2019/12/07 | 45 |
| டன்சினஸ் பெனட்ரி | 158 | 2019/08/12 | 2019/12/09 | 111 |
| டயகம மேற்கு | 150 | 2019/01/21 | 2019/12/08 | 62 |

### 3.15.5 பொருளாதார மற்றும் சமூக தாக்கம்

(அ) இந்த அமைச்சின் செயற்பாடுகள் மற்றும் கடமைகளின் கீழ் காடட்டப்பட்டுள்ளதாவது அரசாங்க மறறும் தனியார் தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணியில்லாத மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதலாகும் எனினும் தற்பொழுது அவ்வாறு கிராமம் அல்லது நகரத்தை உருவாக்குவதற்குப் பதிலாக காணப்படுகின்ற தேயிலைத் தோட்டங்களுக்குள்ளேயே காணப்படுகின்ற லைன் வீடுகள் அமைந்திருக்கும் காணிகளுக்கு மேலதிகமாக தோட்டத்திலேயே காணப்படுகின்ற ஏனைய காணிகளிலிருந்து வீடுகளுக்காக 07 பேச்சஸ் வீதம் நலன்பெறுனர்களுக்கு வழங்குதல் அவதானிக்கப்பட்டது. அந்த வீடுகளுக்கான காணி அளவுக்கு மேலதிகமாக உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும் உள்ளடக்கி ஒரு நலன்பெறுனருக்காக ஆகக்குறைந்தது 12 பேச்சஸ் தோட்டம் தேவைப்படும் என தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 1312 ஏக்கர் காணி பயிர்ச் செய்கைக்காக இழக்கப்பட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக இன்னும் பயிரிடக்கூடிய காணியின் அளவு படிப்படியாக குறைவடையும் என்பது வெளிப்டுத்தப்பட்டது. அதற்கிணங்க தேயிலைப் பயிாச்செய்கைக்காக இழக்கப்படுகின்ற காணிகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | மாவட்டம் | 2019.12.31 அளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை | 2019.12.31 அளவில் பூர்த்தி செய்த பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை | தேவைப்படுகின்ற காணிகளின் ஏக்கர் அளவு |
|---|---|---|---|---|---|
| அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின் கீழ் | நுவரெலியா | 982 | 570 | 1,552 | 116.4 |
| | ஹற்றன் | 927 | 1012 | 1,939 | 145.42 |
| இந்திய உதவியின் கீழ் | நுவரெலியா ஹற்றன் | 1481 | 12519 | 14,000 | 1,050.00 |
| மொத்தம் | | | | 17,491 | 1,311.82 |

(ஆ) நுவரெலியா மாவட்டத்தில் பரீட்சிக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பாக கபரகல (கீழ் பகுதி) தோட்ட வீடமைப்பு செயற்திட்டத்தின் மூலம் கபரகல எலமுல்ல, நாமகல் வித்தியாலயத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட லயின் இலக்கம் 03 இல் குடியிருக்கும் 10 குடும்பங்கள், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலாளரின் பணிப்புரைக்கு இணங்க அந்த தோட்ட வீடுகள் அப்புறப்படுத்தப்பட்டு புதிய 10 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அனர்த்த நிலையில் காணப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட குடும்பங்கள் வசித்த லயின் அறைகளை உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஏனைய இடங்களில் குடியிருந்த 04 குடும்பங்களின் 17 அங்கத்தவர்கள் அந்த 04 லயின் அறைகளில் குடியிருப்பதற்கு வந்திருந்தார்கள் என்பது மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக இடர்பாடுகளுக்கு உட்படக்கூடிய லயின் அறைகளில் இன்னும் குடியிருக்கின்றமையின் காரணமாக ஏற்படக்கூடிய உயிர் ஆபத்துக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்புக்கூறக்கூடிய நபர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.



(இ) பரீட்சிக்கப்பட்ட நலன்பெறுனர்களின் வீடுகளுடனான 7 பேச்சஸ் காணியை செயற்திட்டத்தின் தொடக்கத்திலேயே அளவை செய்து நில அளவையாளர் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்ட பூர்த்தி செய்து நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட 370 வீடுகளில் பல இடங்களில் எல்லைத் தூண் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் வழங்கப்பட்ட 07 பேசசஸ்களை மிகைத்து காணிகளை பிடித்துக்கொள்வதற்கு மண் மேடுகளை வெட்டுதல் இடம்பெற்றிருந்தது எனவும் அதற்கிணங்க சில காணிகளில் மண் நீரினால் அடித்துச் செல்வதற்கு உட்பட்டிருந்தமையின் காரணமாக மண்சரிவு ஆபத்துக்கள் ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

**3.16 ஏனைய அவதானிப்புக்கள்**

--------------------------------------------

(அ) அனைத்து செயற்திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு முன்னர் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சிபார்சுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அதன் சிபார்சுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனை கணக்காய்வில் திருப்திக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் வீடுகளை நிர்மாணித்ததன் பின்னர் குடியிருப்பதற்கு முன்னர் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சிபார்சுகளின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) அமைச்சிற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெருந்தோட்ட மக்கள் தொடர்பாடல் வசதிகளை வழங்குபவர்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கடமைப்பட்டியலின் 01 ஆம் இலக்க பந்தியின் கீழ் அமைச்சினால் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள

தோட்டங்களில் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழும் ஏனைய நிதி ஏற்பாடுகளின் கீழும் (இந்திய அரசாங்கத்தின் நிதி ஏற்பாடு) அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்புச் செயற்திட்டங்களின் வெளிக்கள நடவடிக்கைகளை அவதானித்தல் தகவல்களைச் சேகரித்தல், ஆய்வுசெய்தல், நிர்மாண நடவடிக்கைகளைப் பரீட்சித்தல், கொடுப்பனவு செய்தல் என்பவற்றிற்கான சிபார்சுகளை உரிய வேளைக்குச் சமர்ப்பித்தல் முதலிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வினால் மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவர்களால் அந்த செயற்திட்ட மேற்பார்வை மற்றும் அவற்றுக்கு உதவியளித்தல் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு எதுவித சான்றும் வெளிப்படுத்தப்படவில்லை. அமைச்சினால் சம்பளம் செலுத்தப்படுகின்ற மற்றும் அமைச்சிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பதவிகளாக சேர்த்துக்கொள்ளப்பட்ட அந்த உத்தியோகத்தர்களின் மூலம் மேற்கூறிய செயற்பாடுகளுக்காகவும் தோட்ட மக்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களின் உரிய சிக்கல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகவும் பிரதேச செயலகம் மற்றும் நகர சபைகளுக்கு இணைத்து வெளிக்கள வேலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த அலுவலகத்திற்குரிய ஏனைய கடமைகளுக்காக (கோவைகள் சார்ந்த) அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4. சிபார்சுகள்

-----------------

4.1 வீடுகளை நிர்மாணிப்பதற்காக தேயிலை பயிரிடப்படக்கூடிய காணிகளை ஈடுபடுத்தாது காணிகளைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 வீடுகளை நிர்மாணிப்பதற்காக லயின் வீடுகள் அமைந்த காணியை ஈடுபடுத்தி மாடி வீடுகளை சனசமூக மண்டபத்துடன் நிர்மாணிப்பதன் மூலம் மற்றும் தொடக்க திட்டத்துக்கு இணங்க தோட்டங்களில் வேலைசெய்கின்ற நபர்களுக்கு மாத்திரம் தோட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் சேவையாற்றுகின்ற காலத்துக்கு மாத்திரம் வழங்குவதன் மூலம் குடியிருத்தல் மற்றும் தோட்டத்தில் சேவையாற்றுவதனை நிராகரிப்பதனை குறைக்கக்கூடியதாக இருத்தலும் பயிரிடக்கூடிய காணியை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும்.

4.3 நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை வழங்குவதற்கு தோட்டங்களில் வேலை செய்கின்ற ஊழியர்களை மாத்திரம் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் மற்றும் தற்பொழுது ஓய்வுபெற இருக்கின்ற அந்த ஊழியர்களுக்கு அமைச்சின் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு காணி இல்லாத மக்களுக்கு புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்கும் நிர்மாணங்களின் கீழ் தோட்டங்களுக்கு வெளியே நிரந்தர வீடுகளை மாடி வீட்டு முறைமைக்கு சனசமூக மண்டபத்துடன் அக்குடும்பங்களுக்காக ஒரு சிறிய பொது பண்ணை காணியை வழங்குவதன் மூலம் அவர்களின் கால்நடைகளை வைத்துக்கொள்வதற்கான வசதிகளையும் வழங்கி அவர்கள் அந்த வீடுகளில் குடியிருப்பதனை நிரகாரிப்பதை குறைக்கக்கூடியதனைப் போல அமைச்சின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளலாம்.

4.5 வீட்டு நலனாளிகளைத் தெரிவு செய்யும் போது சரியான வரையறைகளுக்கு இணங்க தெரிவு செய்யப்பட்டது என்பதனை அமைச்சின் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அச்சந்தர்ப்பத்திலேயே கடன் அடிப்படை தொடர்பாக விளக்கமளித்து அந்த ஊழியர்களுடன் தேவையான நிபந்தனைகளுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

4.6 ஒவ்வொரு மாகாணத்திற்கு இணங்க BSR ( பட்டியல்படுத்தப்பட்ட கட்டிட விலை) இனை அடிப்படையாகக் கொண்டு பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் அளவீட்டுப் பத்திரத்தில் (BOQ) பயன்படுத்த வேண்டிய மூலப்பொருட்களில் இருக்கவேண்டிய தரம் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.7 அனைத்து நிர்மாணங்களுக்காக பெறுகை வழிகாட்டிகளைப் பின்பற்றி கேள்விகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் செலுத்துதலை அமைச்சு நேரடியாக மேற்கொள்ள வேண்டியதுடன் தோட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு ஆலோசனை சேவைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக உதவியை வழங்குவதற்கு மாத்திரம் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினை ஈடுபடுத்துதல் வேண்டும்.

4.8 கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபார்சுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதற்கிணங்க நிர்மாணங்களைத் திட்டமிடுதலும் அத்திட்டத்திற்கு இணங்க நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டது என அமைச்சினால் மேற்பார்வை செய்து உறுதிப்படுத்துதல் வேண்டும்

4.9 ஒரு வீட்டின் பெறுமதியில் ஆகக் குறைந்தது முதலாவது கட்டத்திற்காக (காணியையும் நுழைவ வீதிகளையும் தயார்படுத்துவதற்கு) செலவு செய்யப்படுகின்ற பெறுமதியில் ஒரு பகுதிக்கு வீட்டு நலனாளிகளின் வேலைப்பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனை முறைப்படியாக அமைச்சின் மற்றும் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு, ஆலோசனைக் கம்பனியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மூலம் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

4.10 தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் இடைக்கால மற்றும் இறுதி விலைப்பட்டியல்களை விடயத்திற்குப் பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் உரிய ஒப்பந்தக்காரருடன் ஒன்றித்த கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அந்த ஒன்றித்த கணக்குகளுடன் விலைப்பட்டியல்களைப் பரீட்சித்த ஆலோசனைக் கம்பனியாகச் செயற்படுகின்ற நிறுவனத்தின் சிபார்சினைப் பெற்றுக்கொண்டு அமைச்சின் மூலம் அங்கீகரித்து கொடுப்பனவு செய்தல வேண்டும்.

4.11 இறுதி விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டது என வேலைகளின் இறுதி அறிக்கையை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்று ஆலோசனைக் கம்பனியால் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் நிறுத்தி வைத்தல்களைக் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அமைச்சின் ஒரு உத்தியொகத்தரின் மூலம் இனங்காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பான ஒரு அறிக்கையைப் பெற்று அவற்றினை சரிசெய்தல் வேண்டும்.

4.12 இறுதி விலைப்பட்டியல்களுடன் அனைத்து பொறுப்புச் சான்றிதழ்களும் பிணையும் சமர்பித்தல் வேண்டும்.

4.13 நலனாளிகளிடமிருந்து கடன் அறவிடப்பட்ட அளவு மற்றும் அறவிட வேண்டிய அளவு ஒவ்வொரு நலனாளி ரீதியாக பிரித்து இனங்காணக்கூடிய வகையில் கடனை மீள அறவீடு செய்தல் சம்பந்தமாக முறைப்படியாக நிதிப்பிரமாணம் 501(இ) மற்றும் 502(ஆ) இன் பிரகாரம் அமைச்சினால் ஏடுகள் பேணப்பட

வேண்டியதுடன் இதுவரை கடன் அறவீடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ள நலனாளிகளுக்கு அவர்களின் பணம் மீண்டும் சம்பளத்திலிருந்து அறவிடப்படமாட்டாது என்பதனை தெரியப்படுத்துவதற்கு அது பற்றி அவர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

4.14 நிருவகிக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லாததனால் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு முகாமைத்துவ சேவையை வழங்கும் பொறுப்புக்கு மேலதிகமாக நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்தல், ஒப்பந்தங்களை வழங்குதல், கொடுப்பனவு செய்தல் முதலிய தோட்ட மக்களுக்கு வீட்டு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு முழுமையாக ஈடுபடுத்தப்படுவதுடன் அதில் நிர்மாண செயற்பாடுகளுக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருத்தல், தோட்டத்திற்கும் அமைச்சிற்குமிடையே ஒருங்கிணைப்புச் செய்வதற்காக விசேடமாக நடவடிக்கை எடுக்கும் இயலுமை மற்றும் அனைத்து பிரதேசங்களிலும் வியாபித்திருப்பதனை கவனத்தில் கொண்டு இந்த அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இந்த நிறுவனத்தை அரசாங்கத்தின் சட்ட விதிகளின் கீழ் ஒரு அரசாங்க நிறுவனமாக மாற்றுதல்.

4.15 ஒரே செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு அமைச்சிற்கு மேலதிகமாக புதிய அதிகாரசபையைத் தோற்றுவித்தல் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனால் அதனை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்துதல் வேண்டும்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2022 யூலை 27 திகதி

| | அமைச்சரவைக் குறிப்பு | | அமைச்சரவைத் தீர்மானம் | | நிதி அமைச்சின் அவதானிப்புக்கள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| | **திகதி, இலக்கம் மற்றும் தலைப்பு** | **விபரம்** | **திகதி / இலக்கம்** | **விபரம்** | | |
| 1. | பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு | | | | | |
| | 2006 நவம்பர் 30 ஆந் திகதி இளைஞர் மேம்பாட்டு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிகழ்ச்சித் திட்டம் | 2006 ஆகஸ்ட் 25 ஆந் திகதி இளைஞர் மேம்பாட்டு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் சனாதிபதி அவர்களினால் அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் காட்டப்பட்டிருந்தது. | 2006 திசெம்பர் 01 06/2249/240/005 | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| 2. | மண்சரிவு மற்றும் அதிகளவு ஆபத்தான பிரதேசங்களில் 100 நாட்கள் | | | | | |
| 2.1 | 2015/03/02 03/2015 (மண்சரிவு மற்றும் | 100 நாட்கள் நிகழ்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாக மண்சரிவின் தாக்கத்திற்கு உட்படுகின்ற மற்றும் அதிக | 2015/03/18 15/0187/626/003 | நிதி அமைச்சரின் அவதானிப்புக்களை மீள்குடியேற்றம் மீள் நிர்மாணம் மற்றும் இந்து | விஞ்ஞாபனம் தொடர்பாக நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள் 2015/03/18 ஆந் திகதி | மீரியபெத்த இயற்கை அனர்த்தம் தொடர்பாக விசேட சந்தர்ப்பமாக கருதப்படலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| அதிக ஆபத்தான பிரதேசங்களிலுள்ள தோட்ட மக்களுக்கு 100 நாட்கள் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல்) | ஆபத்துக்களுடனான மண்சரிவுகள் உள்ள பிரதேசங்களில் வசிக்கின்ற தோட்ட மக்களுக்காக புதிய 300 வீடுகளை ரூபா 1.2 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்டு அமைச்சரவைக்கு விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சமய விவகார அமைச்சுடன் கவனித்துப் பார்த்ததன் பின்னர் விஞ்ஞாபனத்தின் உத்தேச வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரத்தினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் காட்டப்பட்டிருந்தது. | பின்வருமாறு காட்டப்பட்டிருந்தது.<br>(1) இயற்கை அனர்த்தங்களின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குவதற்கு இணங்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அரசாங்கத்தினால் நிதி வழங்குகின்ற நிகழ்கால வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் ஒரு வீட்டின் கிரயம் ரூபா 500,000 இனை மிகைக்காதிருத்தல் வேண்டும்.<br><br>(2) எனவே இடம்பெயர்ந்தவர்களின் தேவைப்பாட்டை நிறைவேற்றி தேசிய வீடமைப்பு கொள்கைக்கு இணங்க 2015 பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 200 மில்லியனுக்குள் இந்த உத்தேச நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது. | (2015/04/06, 2019/12/19 ஆந் திகதிய நிதி அமைச்சின் அவதானிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | (3) எவ்வாறாயினும், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ரூபா 1.2 மில்லியன் செலவில் நிர்மாணித்தலானது கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| 2.2 | 2015.04.06 ஆந் திகதிய எஸ்/1/019 ஆம் இலக்க (தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு) அரசாங்கத்தின் 100 நாட்கள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமாந்தரமாக மண் சரிவினால், தீப்பிடித்ததினால் சேதத்திற்குள்ளாகிய மற்றும் மண்சரிவு ஏற்படும் அதிக ஆபத்தான பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்காக வீடுகளை | மண்சரிவினால் இன்னல்களுக்கு உள்ளாகிய குடும்பங்களுக்கு முழுமையாக மானியத்தின் அடிப்படையில் வழங்குவதற்காக ஒரு வீட்டிற்கு ரூபா 1.2 மில்லியன் வீதம் 300 வீடுகளை நிர்மாணிப்பதற்கு விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவையிடமிருந்து விளக்கமளித்தல் எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2015-04-12<br>15/0412/626/003-1<br>(2015-04-08) | அமைச்சரவை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2015/04/08 ஆந் திகதிய அமைச்சரவையின் விஞ்ஞாபனத்திற்காக அங்கீகாரம் வழங்கியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>1. பொதுத் திறைசேரியின் முற்பணத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படுகின்ற 4000 வீடுகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்தல்.<br><br>2. அதிக ஆபத்தான மண்சரிவுப் பிரதேசங்களில் | நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | | | வாழ்கின்ற, தீயினால் வீடுகள் முழுமையாகச் சேதமடைந்து பாடசாலைகள், சமூக நிலையங்கள் போன்ற பொது இடங்களில் தங்கியிருக்கின்ற அல்லது பாடசாலை செல்லும் சிறுவர்கள் மற்றும் கற்பினித் தாய் மார்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | |

3. புதிய வாழ்க்கை வீடுகளை நிர்மாணித்தல்

---

3.1 புதிய வாழ்க்கை வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2010 இலிருந்து 2014 வரை சமர்ப்பித்த விஞ்ஞாபனம் மற்றும் தீர்மானங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3.2 | 2015-11-02 ஆந் திகதிய மற்றும் CM/02/2015 ஆம் இலக்க தோட்ட, பெருந்தோட்டப் பிரிவின் புதிய வீடுகளை நிர்மாணிப் பதற்காக ஒதுக்கீடு | வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 650,000 நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கும் அதில் ரூபா 340,000 இனை 4 வீத வட்டியுடன் 15 ஆண்டுகளுக்குள் அறவிடப்படுகின்ற ஒரு கடனாகவும் ரூபா 310,000 இனை உதவியாக வழங்குவதற்காகவும் அமைச்சரவையின் | 2015 நவம்பர் 19 ஆந் திகதிய அமப/15/1644/739/004 ஆம் இலக்கம் (2015 நவம்பர் 11) | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் அவதானிப்புக்களின் இறுதிப் பந்திக்கு இணங்க வீடுகளை நிர்மாணிப்பதற்காக பெருந்தோட்டக் கம்பனிகளின் உதவியைப் பெற்றுக் | 2015/11/02 ஆந் திகதிய நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட பணத்தின் அளவை அதிகரிப்பதற்காக அங்கீகாரத்தினை வேண்டுதல். | அங்கீகாரத்தினை வேண்டி விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | கொள்ளும் இயலுமையை ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சு செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் விஞ்ஞாபனத்திற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. | |
| 3.3 | 2015-12-22 தோட்டத்திலுள்ள மக்களின் சமூக நிலைமையினை மேம்படுத்துவதற்கான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம் | தோட்ட மக்களின் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்கான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கான விஞ்ஞாபனம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2016-01-21 16/0007/739/001 (2016-01-13) (2015/11/18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 15/1510/739/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை) | குறிப்பினை நிதி அமைச்சரின் அவதானிப்புக்களுடன் கவனத்திற்கு எடுத்து கலந்தாலோசித்ததன் பின்னர் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>1. தோட்ட மக்களின் சமூக நிலைமையைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம் 2016-2020 இனை அமுல்படுத்து வதற்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.<br><br>2. உரிய செயல் | (2015/12/22 ஆந் திகதிய நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைத் திட்டத்தின் நடவடிக்கைகளை திருத்தத்திற்கு இணங்க 5 ஆண்டுகள் காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யுமாறு சான்றுபடுத்தும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சு செயலாளருக்கு அறிவுறுத்துதல். | |

4. பசுமையான தங்க வீட்டு செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டிலிருந்து

------------------------------------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| 2017.02.06 ஆந் திகதிய CM/02.2017 ஆம் இலக்க தோட்ட மக்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல் ஒரு வீட்டிற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை ரூபா 650,000 இலிருந்து ரூபா 1,000,000 வரை அதிகரித்தல் | ஒரு வீட்டிற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை ரூபா 650,000 இலிருந்து ரூபா 1,000,000 வரை அதிகரிப்பதற்கும் அதில் ரூபா 480,000 தொகையினை மானியமாகவும் ரூபா 520,000 தொகையினை 15 ஆண்டுகள் காலத்தினுள் நலன்பெறுனர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கடன் பணமாக வழங்குவதற்கும் மண்சரிவினால் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள குடும்பங்களுக்கும் மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்களில் | 2017-03-01 17/0306/739/002 (2017-02-21) | அமைச்சரவையின் அங்கீகாரமானது விஞ்ஞாபனத்திற்கு கிடைத்துள்ளது. | 2017-02-17 ஆந் திகதி நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள் விஞ்ஞாபனத்திற்கு இணக்கப்பாட்டினை வழங்கியிருந்தது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வசிக்கின்ற அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறுமாறு தெரிவித்துள்ள குடும்பங்களுக்கு ஒரு வீட்டினை நிர்மாணிப்பதற்கு தேவையான முழுச் செலவினையும் மானியமாக வழங்குவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது. | | | | |

5. தோட்ட ஊழியர்களுக்கு காணி உரிமையுடன் உண்மையான வீட்டின் உரிமையாண்மை

---

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
